மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

1 - 1 - 56 | இதழ் 17

புயலில் சிக்கிப் புழுதியில் வாடிடும் மக்கள்



உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

'மன்றம்' பொங்கல் மலர்

1956 சனவரித் திங்களில்
பொங்கல் மலர் புதுமணத்தோடு பூக்கும்!

●

அறிவால் - ஆராய்ச்சியால் - அழகால்
சிறந்த
சொற்செறிவும் - பொருளாழமும்
கொண்ட
கதைகள் - கவிதைகள் - கட்டுரைகள்
மலரில் மணங்கமழும்!

●

தலைசிறந்த
கலைஞர்கள் - கவிஞர்கள் - அறிஞர்கள்
எழுதுகிறார்கள்!

●

மூவண்ண முகப்பு அட்டையோடு 100 பக்கங்களில்
மிளிரும்!

விலை ரூபாய் ஒன்று

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1-1-56 ஞாயிற்றுக்கிழமை

சேர வாரீர் திராவிடத்தீர் !

திராவிடத்தின் விடுதலை இயக்கமாக வீறு கொண்டு எழுந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின்,' உறுப்பினர்ச் சேர்க்கும் சீரிய பணி, இப்பொழுது துவங்கப்பெற்றுள்ளது.

முன்னேற்றக் கழகப் பாசறையில் முன்னணி வீரர்களாகப் பதிவு செய்துகொண்டு, விடுதலைப் போராட்டத்திற்காகத் தம்மை ஆயத்தப் படுத்திக்கொள்ள வேண்டிய பொறுப்பு வயது வந்த ஒவ்வொரு திராவிட மகனையும்—மகளையும் சார்ந்ததாகும். அந்தக் கடமையை நிறைவேற்றிக்கொள்ளுவதற்கான வாய்ப்பு இப்பொழுது தரப்பட்டுள்ளது.

திராவிடத்தின் அறிவு சான்ற பெரியோர்களே! ஆக்கம் மிகுந்த தாய்மார்களே! உணர்ச்சி கொண்ட இளைஞர்களே! ஊக்கம் நிரம்பிய பாட்டாளிகளே! ஆற்றல் செறிந்த உழைப்பாளிகளே! நீவிரனைவரும் நாட்டுக்கும்—மொழிக்கும்—மக்களுக்கும் இத்தலைமுறைக் கடன் ஆற்ற, "வாரீர்! வாரீர்!" என்று அழைக்கிறோம்! வந்து "முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர் ஆவீர்! ஆவீர்!" என்று அன்புடன் உரைக்கிறோம்! "சேர வாரும் திராவிடத்தீர்!" என்று வாயார—மனமார—இருகை நீட்டி அழைக்கிறோம்!

முன்பு உறுப்பினராய் இருந்தோர் தம் உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக்கொள்வதற்கும், புதிதாகச் சேர விரும்புவோர் தம் உறுப்பினர் தகுதியைப் பதியவைத்துக்கொள்வதற்கும் ஏற்ற காலமாக 1955 டிசம்பர்—1956 சனவரி ஆகிய இரண்டு திங்கள்களும் தலைமைக் கழகத்தால் குறிப்பிடப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளிடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும், மங்கா மதிப்பும், மாறா அன்பும், குறையா அக்கரையும் கொண்டுள்ள அவ்வளவு பேர்களும் தம்மை உறுப்பினராகப் பதிவு செய்துகொள்வதற்கு ஏற்ற காலம் இதுதான். உறுப்பினராகக்கூடிய வாய்ப்புப் பெற்ற எவரும் இதுபோது சோம்பி வாளாக் கிடத்தல் கூடாது. கடமையைக் காலத்தோடு செய்ய அறிவுப்பட்டாளத்தினரும், ஆற்றல் பட்டாளத்தினரும் உடனடியாகத் திரண்டெழுவார்களாக!

திராவிட முன்னேற்றக் கழகத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு மிகவான உறுப்பினர்கள் காணப்படுகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது பொலிவோடும், வலிவோடும் திகழ்வதாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியையும், வலிவையும் அதன் உறுப்பினர் பட்டியலை நீட்டுவதன் மூலம்தான் பொதுமக்களையும், மாற்றுக்கட்சிகளையும், அரசாங்கத்தையும் உணரச் செய்ய முடியும். கழகத்தின் ஆற்றலை அவனி அறியச்செய்ய வேண்டுமானால், எங்கணும் உறுப்பினர்களைப் பெருக்கிக், கிளைகளைத் தோற்றுவித்துக், கட்டுக்கோப்பை வளர்த்து, கண்ணியத்தைக் கொண்டு, கடமையைச் செய்ய முற்பட்டால்தான் இயலும். திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் விடுதலை வீரர்களின் கோட்டத்தை எழிலுடையதாகவும், ஏற்றமுடையதாகவும், பொலிவுடையதாகவும், வலிவுடையதாகவும், திறமுடையதாகவும், திண்மையுடையதாகவும், ஆக்கமுடையதாகவும், ஆற்றலுடையதாகவும் ஆக்கக் கழகத் தொண்டர்கள் அனைவரும் ஆங்காங்கு முனைவார்களாக!

திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராய்ச் சேர்ந்திருப்பவர்களின் எண்ணிக்கைக்கும், சேர இருப்பவர்கள் எண்ணிக்கைக்கும் இடையே பெரிய இடைவெளி இருந்து வருகிறது. இத்தகைய இடைவெளி இல்லாமற் செய்ய வேண்டிய பொறுப்பு, கழகத்தின் கடமை வீரர்களின் முக்கியமான பணியாகும். சேர இருப்பவர்களின் எண்ணிக்கைக்கும் சேர வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள பெரிய இடைவெளியை அடுத்து நாம் போக்கியாக வேண்டும். சேர வேண்டியவர்களின் எண்ணிக்கை முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகமாக மாறும் நிலையில், "திராவிட நாடு திராவிடர்க்காகும்!" அதற்குக் கழகத் தோழர்களிடத்திலே முக்கியமாக வேண்டப்படுவன கடமை—கண்ணியம்—

கருத்துக் கதிர்

புயலுக்குக் காரணம் !

தமிழகத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் அண்மையில் புயல் வீசியதற்கு, அறிவியல் அறிஞர்கள் அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து இயற்கைக் காரணங்களை எடுத்துக் கூறினர். ஆனால் அன்பர் இராசகோபாலாச் சாரியார் 'அற்புதமான' காரணம் ஒன்றைக் கண்டறிந்து கூறியிருக்கிறார்! ஆண்டவனுக்கு ஏற்பட்ட சினந்தான் புயலை வீசும்படி செய்துவிட்டது என்பதுதான் ஆச்சாரியார் கூறும் 'அருமையான' காரணம் !

எந்தத் தஞ்சை மாவட்டம் 'ஆண்டவனுக்கு' மிகவான கோயில்கள் கட்டிக், குளங்கள் வெட்டிக், குடமுழுக்குகள் செய்து, திருவிழாக்கள் நடத்தித், தூபதீப நைவேத்தியங் காட்டிக், காணிக்கைகள் தந்து மிகச் சிறப்பாக வழிபாடு செய்துவந்ததோ, அந்த மாவட்டத்தில்தான், புயல் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களைப் பலிகொண்டு, பொருள்களைப் பாழ்படுத்தியிருக்கிறது! 'ஆண்டவனி'டம் மிகவான பக்தி காட்டிய மாவட்டத்திற்கு ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது? புயல் மக்களை மட்டும் வாட்டவில்லை, 'ஆண்டவனை'யும் சேர்த்துதான் படாதபாடுபடுத்தியிருக்கிறது! சில இடங்களில் 'ஆண்டவனி'ன் கோயில்களே இடிந்து சரிந்துபோய்க்கிடக்கின்றன! ஆண்டவன் சொத்துக்களுக்கு ஏற்பட்ட கேடுகளும் கணக்கிலடங்கா! புயலில் சிக்கித் தவித்து மாண்டவர்கள் அத்தனைப்பேரும் நாத்திகர்கள் அல்லர்; முக்காலே மூன்று விசம்பேர் பக்தகோடிகளாகத்தான் இருந்திருக்கின்றனர்! பக்தகோடிகளாக இருப்பதே 'ஆண்டவனு'க்கு ஆகாதுபோலும், ஆச்சாரியார் கருத்துப்படி! 'ஆண்டவனி'ன் சினம் பாபிகளுக்கு மட்டும் கேடு விளைவித்திருந்தால், ஆச்சாரியாரின் கருத்து அவர் மதக் கொள்கைப்படி சரியாக இருந்திருக்கும்! ஆனால் 'ஆண்டவன்' நல்லவர்களையும், 'புண்ணியவான்'களையும் அல்லவா சேர்த்து அழித்திருக்கிறான்! இப்படிக் குருட்டுத்தனமாக நடந்த 'ஆண்டவனை' முட்டாள் என்பதா? அல்லது 'ஆண்டவன்' சினம் கொண்டுள்ளான் என்று கூறியவரை முட்டாள் என்பதா? பகுத்தறியும் பண்பினர்தான் சிந்திக்க வேண்டும்.

'தெய்வாதீனமா'கச் சிலர் உயிர்பிழைத்தனர் என்று சொல்லி வைதீகர்கள் 'ஆண்டவனை' வாழ்த்துகிறார்கள். இறந்தவர்களும் 'தெய்வாதீனமாக'த் தான் இறந்தார்கள் என்று சொல்லி 'ஆண்டவனை' வாழத்த ஏனோ இந்த வைதீகர்கள் மறந்துவிடுகிறார்களோ, தெரியவில்லை! புயலில் சிக்கிப் பலர் இறந்ததற்குத் 'தெய்வம் அல்ல காரணம், என்றால், பலர் பிழைத்ததற்கும் அந்தத் 'தெய்வம்' காரணம் ஆகாமல் இருக்கலாமே! "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது என்ன பாடுபடுகிறது பார்த்தீர்களா?

ஃ ஃ ஃ

நேருவின் ஐந்து வட்டாரங்கள்

இந்தியத் துணைக்கண்டத்தைக் கிழக்கு—மேற்கு—தெற்கு—வடக்கு—மத்தியம் என ஐந்து வட்டாரங்களாகப் பிரித்து, ஐந்திற்கும் ஐந்து ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தி, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே நிருவாக ஒழுங்கை நிலைநாட்டலாம் என்று பண்டித நேரு மாநிலப் புனரமைப்பு விவாதத்தின்போது பாராளு மன்றத்தில் குறிப்பிட்டார்; பின்னர், தாம் அப்படியே எண்ணியிருப்பதாகக் கூறினார்; பின்னர், தாம் அதனை நடைமுறைக்குக் கொண்டுவரப் போவதாகவும் அறிவித்துவிட்டார்! அவர் சனநாயக ஆட்சியின் பேரால் இருந்துவரும் சர்வாதிகாரி! எனவே அவர் எதையும் செய்வார்—எப்படியும் செய்வார்!

கட்டுப்பாடு—சலியா உழைப்பு—விடா முயற்சி—நீங்காப் பற்று ஆகியவையாகும்.

உறுப்பினர்சேர்க்கும்பணி ஆங்காங்கு விரைவாகவும், விடா முயற்சியோடும் நடைபெற வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளிடத்துப் பற்று மிகுந்தோர் அனைவரையும் "சேரவாரீர் திராவிடத்தீரே!" என்று மீண்டும் மீண்டும் கூவி யழைப்போமாக! உறுப்பினர் சேர்க்கும் பணியில் இன்றே இறங்குவோமாக! இனிதே இறங்குவோமாக!

வளர்ந்துவரும் மொழிவழி மாநிலப் பற்றை அழிப்பதற்கும், மொழிவழி மாநிலங்களால் மத்தியப் பேரரசிற்கு ஏற்படும் தொல்லைகளைத் தவிர்ப்பதற்கும், ஏக இந்தியாவை எப்படியேனும் காப்பாற்றுவதற்கும் பண்டித நேரு கையாண்டுப் பார்க்கப்போகும் சூழ்ச்சித் திட்டங்களில் ஒன்றுதான் இந்தியாவை ஐந்து வட்டாரங்களாகப் பிரிக்கும் திட்டமாகும்.

மொழிவழி மாநிலப்பற்று மிகுந்து, மொழிவழித் தனி மாநில அரசுகள் தம்தம் மொழியில் நடைபெறத்தொடங்கிவிடுமேயானால், நாளடைவில் அவை இந்தியாவாக இணைந்திராமல், தனித்தனி நாடுகளாகப் பிரிந்து போய்விடக்கூடும் என்று எண்ணிடும் பண்டித நேரு, மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து ஏக இந்தியாவை நிலைநாட்டவேண்டும் என்று முயலுகிறார்.

இந்தியப் பேரரசியலார் எந்தவித மாற்றம் செய்தாலும், மொழிவழிப் பிரிந்து இனவழிக் கூட்டாட்சியாக ஒன்றுபட்ட திராவிடத்தின் விடுதலையே தி. மு. கழகத்தின் குறிக்கோளாக இருந்துவரும். அந்த நோக்கத்தை அடையவே அது பாடுபட்டுவரும்.

தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகியவற்றைக் கொண்ட பகுதியைத் தெற்கு வட்டாரம் என்று இந்தியப் பேரரசு பிரித்து வைக்க முற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி ஏற்பட்டால் எந்த ஒரு ஒற்றுமைப் பண்பின் அடிப்படையில் திராவிடம் உருவாக்கப்படவேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறோமோ, அந்த ஒற்றுமைப் பண்பு தான் தெற்கு வட்டாரத்தை ஒரே வட்டாரமாக ஆக்க உதவிற்று என்று கூறல் தகும். அப்படி அமையும் தெற்கு வட்டாரமே. திராவிடமாக விடுதலைபெற்றுத் திகழ்வதற்கான வாய்ப்பு, எதிர்காலத்தில் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும். பண்டித நேருவின் நோக்கம் வேறுவகையில் அமைந்திருந்தாலும், நிலைமை அதற்கு மாறான வகைக்குப் பயன்படுவதாக அமைந்தாலும் அமையக்கூடும்.

∴ ∴ ∴

ஒற்றுமை உபதேசம்!

"வடநாடும்—தென்னாடும் இருவேறு பகுதிகள் என்று எண்ணக்கூடாது. இரண்டும் ஒன்று, வேற்றுமை பாராட்டக்கூடாது, ஒற்றுமையை வளர்க்கவேண்டும், வடநாட்டவர்க்குத் தென்னாடு சொந்தம், தென்னாட்டவர்க்கு வடநாடு சொந்தம்" என்று தென்னாடு வந்து செல்லும் பண்டித நேருவிலிருந்து சாதாரண காங்கிரசுத் தொண்டன் வரையில் எல்லா வடநாட்டுக்காரர்களும் ஒற்றுமை உபதேசம் செய்துவிட்டுப் போகின்றனர். உபதேசம் தான் மேற்கண்டவாறு இருக்கிறதே ஒழிய, உள்ள நிலைமை எப்படியிருக்கிறது என்றால், "வடநாடு வடநாட்டவர்க்குச் சொந்தம்; தென்னாடும் வடநாட்டவர்க்குச் சொந்தம்" என்றபடிதான் இருந்துவருகிறது.

உரிமை—ஆதிக்கம்பற்றிய தகராறில் வடநாட்டோடு சேர்ந்து வாழ்ந்து, நீதிபெற முடியாது என்ற எண்ணத்தைத் தென்னாடு நாளுக்குநாள் வலுவாக்கிக்கொண்டு வருகிறது. இந்த அடிப்படைத் தகராறைத் தீர்ப்பதற்கான வழி ஏதும் காணாமல், வடநாட்டு மொழிகளைத் தென்னாட்டுப் பல்கலைக்கழகங்களிலும், தென்னாட்டு மொழிகளை வடநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் வைத்துவிட்டால் நிலைமை சரியாகப்போய்விடும் என்று சில வடநாட்டு எத்தர்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட கருத்தை அண்மையில், இந்தியப் பாராளுமன்றத்தில் உதவி உள்நாட்டு அமைச்சர் தோழர் பி. என். தத்தார் தெரிவித்துள்ளார். இத்தகைய "கிலுகிலுப்பை" ஒலியைக் காட்டி வீறிட்டெழும் திராவிடத்தின் விடுதலைவேட்கையை அடக்கிவிடலாம், ஆட்கொண்டுவிடலாம் என்று வடநாட்டு ஆதிக்கக்காரர்கள் கனவுகண்டுகொண்டிருக்கிறார்கள். திராவிடம் வடநாட்டவரின் உபதேசத்தையல்ல பெற நினைப்பது, வடநாட்டவரிடம் சிக்கிக்கிடக்கும் உரிமையையே பெறவேண்டி நிற்கிறது.

∴ ∴ ∴

பக்தியின் பெருக்குக்கு ஆயுட் தண்டனை பரிசு!

வடநாட்டில் இராசகோட்டைச் சேர்ந்த 16 வயதான இளைஞன் தன் 15 வயதான இளமனைவியின் தலையை வெட்டிச் சிவலிங்கத்திற்குக் காணிக்கையாகப் படைத்தானாம்! அவன் தனக்கு ஆண்டவன் காட்சியளிப்பார் என்று எதிர்பார்த்தானாம்! ஆனால் அவனுக்குக் காட்சியளித்தது ஆண்டவன் அல்ல, போலீசார்தான்! நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதாம்! பக்தன் இப்பொழுது சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளான்!

∴ ∴ ∴

ஐக்கியத்தின் அறிகுறியாம்!

"கணேசரும், (கார்த்திகேயர் என்று அழைக்கப்படும்) சுப்பிரமணியரும் சிவபெருமானுடைய இரண்டு திருக்குமாரர்களே. தென்னாட்டில் கணேசரைப் பிரம்மசாரியாகவும், சுப்பிரமணியரை இரண்டு மனைவியரைப் பெற்றவராகவும் கருதுகிறார்கள். வட இந்தியாவில் சுப்பிரமணியர் அல்லது கார்த்திகேயர் பிரம்மசாரியாகக் கருதப்படுகிறார்; கணேசருக்குத்தான் இரு மனைவியர் இருக்கிறார்கள். இந்த நிலையில் வடநாடும் தென்னாடும் ஐக்கிய பாவம் அடைவதற்குத், தென்னாட்டு மக்கள் கணேசரை அதிகம் வழிபட்டும், வடநாட்டு மக்கள் (அவர்கள் அநேகமாக மறந்துவிட்ட) சுப்பிரமணியரை வழிபட்டும் வருவது சாலச்சிறந்தது என்று நான் கருதுகிறேன்."

—திரு. பிரகாசா : "ஆனந்த விகடன்" தீபாவளி மலர் 1955.

∴ ∴ ∴

அவரும் ஆரியம்—திராவிடம் பேசுகிறார்

"நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல மொழிகள் பேசப்படுகின்றன. அம் மொழிகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம் : ஒன்று, ஸமஸ்கிருதத்தை அடிப்படையாகக்கொண்ட ஆரிய மொழிகள்; இரண்டு, திராவிட இன மொழிகள்.

பெரும்பாலோரால் பேப்படும் பாஷை ஹிந்தி என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. கணக்கு எடுத்துப் பார்க்கும்போது, ஹிந்தி பாஷையைப் பேசுகிறவர்கள் நம் நாட்டில் 13 கோடிப் பேர்கள். பாக்கி இருக்கும் 23 கோடி மக்களும் வேறு மொழிகளைத் தாய் மொழியாகக்கொண்டவர்கள்.

ஹிந்தி	1310	லக்ஷம்
உருது	220	,,
மராத்தி	270	,,
வங்காளி	250	,,
குஜராத்தி	160	,,
ஒரியா	130	,,
பஞ்சாபி	120	,,
அஸ்ஸாமி	50	,,
காஷ்மீரி	20	,,

மொத்தம் 2530 லக்ஷம் ஜனங்கள் ஆரிய மொழி பேசுபவர்கள்.

திராவிட மொழி பேசுபவர்கள் வருமாறு:

தெலுங்கு	330	லக்ஷம்
தமிழ்	270	,,
கன்னடம்	150	,,
மலையாளம்	130	,,

இந்தப் பதின்மூன்று மொழிகளையும் பேச்சு வழக்கில் இல்லாத ஸமஸ்கிருதத்தையும் சேர்த்து, இந்தியாவிலே பதினான்கு பிரதான மொழிகள் இருப்பதாக அரசியல் சட்டத்தில் கண்டிருக்கிறார்கள்."

—திரு. சி. சுப்பிரமணியம் : "ஆனந்த விகடன்" தீபாவளி மலர் 1955.

∴ ∴ ∴

அவரே ஒப்புக்கொள்கிறார்!

"தமிழ் மொழி மிகவும் தொன்மையானது; சக்தியுள்ளது; பெருமை வாய்ந்தது; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் காலம் இழைக்கும் நாசங்களைக் கடந்து நின்று ஈடு கொடுத்திருக்கிறது. இன்று, சீவனுள்ள மொழிகளில் மிகவும் பழமையானது அது என்று நாம் சொல்லலாம்."

—திரு. பிரகாசா : "ஆனந்த விகடன்" தீபாவளி மலர் 1955.

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0
இலங்கைக்கு வி. பி. மூலம் ஆண்டுக் கட்டணம்	7—8—0	

தொடர்கதை

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஒருவாரம்வரை கமலநாதன் தன் அறையை விட்டு வெளிவரவில்லை. ஜன்மதண்டனை யடைந்த குற்றவாளியைப்போல, அறைக்குள் நடமாடிக்கொண்டிருந்தான். அறைக்கதவுகள் மூடப்பட்டு, பகலின் வெளிச்சம் புகாமல் இருண்டுகிடந்த அந்த அறைக்குள் நுழைபவர்களுக்கு, கமலநாதன் இருக்குமிடம் தெரிவதில்லை. பலதடவை அவன் கட்டிலைவிட்டு இறங்கி மூலையில் படுத்திருப்பான்.

டாக்டர் சஞ்சீவி உள் நுழைந்து, ஜன்னல் கதவைத் திறந்தார். கமலநாதனின் கண்கள் [illegible] காட்டு [illegible] இருண்ட குகையில் கிடந்த காட்டு மிராண்டியைப்போல; அவன் முகம், தலை, உடைகள் எல்லாமிருந்தன.

"கமலநாதன்! எழுந்து வா!" என்று டாக்டர் சஞ்சீவி அவன் கையைப் பிடித்து, தூக்கி உட்காரவைத்தார். "வெளியில் வா! இப்படியே உட்கார்ந்திருந்தால்......! இறந்தவள் மீண்டும் வரப்போவதில்லை."

டாக்டர் சஞ்சீவியைக்கூட அவனால் அடையாளங்கண்டுகொள்ள முடியவில்லை. வெளியுலகம் பூராவும் அவனுடைய நினைவிலிருந்து அகன்றுவிட்டன. தன்னுடைய இருண்ட உள்ளத்தினுள் மட்டும் அவன் உலவிக்கொண்டிருந்தான், அதிலும் ஒரு குற்றமெனும் பாரத்தைச் சுமந்துகொண்டு. மிக வேதனையான காரியம்! அந்த வேதனை அவனை வெளியுலகுக்கு உணர்வற்றவனாக ஆக்கிவிட்டது.

டாக்டர் சஞ்சீவி மிகச்சிரமத்துடன் அவனை வெளியழைத்து வந்து, நாவிதனை வரச்செய்து முகத்தில் வளர்ந்திருந்த காட்டை அழித்து, நீராடச்செய்து, உட்காரவைத்தார். கமலநாதன் குழந்தையைப்போல் எல்லாவற்றுக்கும் பேசாமல் இருந்தான். அவனுடைய பார்வை சூன்யமாக அர்த்தமற்றதாகிவிட்டது.

உணவு வைக்கப்பட்டபொழுது, வெறும் சோற்றைமட்டும் கமலநாதன் உண்ண ஆரம்பித்தான். பக்கத்திலிருந்த டாக்டர் சஞ்சீவி, "குழம்பு, நெய் விட்டுக்கொள்!" என்று போடச்செய்தார். கமலநாதன் எந்தச் சுவையையும் பார்க்காமல் இரண்டுபிடி சாப்பிட்டான். பின் எழுந்துவிட்டான்.

"மரணம் எல்லோருக்கும் வரக்கூடியது. எனக்குக்கூட எண்ணதோணும், போகிற பொழுது அந்த மூலையில் எனக்காக அது [illegible] சத்திருந்தாலும் இருக்க[illegible] [illegible] நினைத்து அதிகம்......தங்கம் போனபின்..." ஆறுதலளிக்கச் சொன்னவரின் கண்களில், கண்ணீர் வழிந்தது.

"தங்கம்! அவளுக்கென்ன?"

"தங்கம் இறந்தபின்......"

"தங்கம் இறந்தாளா? இல்லை.,.....அவள் கொலை செய்யப்பட்டாள்......" கமலநாதன் முனகிக்கொண்டான்.

டாக்டர் சஞ்சீவிக்கு அந்தச் சொற்கள் கேட்டன. "அப்படிச் சொல்லாதே. டாக்டர் நாகசாமியும் மற்றவர்களும் மிகவும் பாடுபட்டோம். ஆனால் அப்பொழுதே தெரியும், அவளுக்கு ஆபத்து வருமென்று ஆனால் ஒரு மாதத்துக்குள் வருமென்று எதிர்பார்க்கவில்லை."

கமலநாதன் திரும்பிப் பார்த்தான்.

"விலாவெலும்பு உடைந்து உள்ளே குத்தியதால், சிறுநீர்ப்பை சேதமடைந்தது. அது எப்பொழுதும் ஆபத்தைத் தரவல்லது."

"ஏன் அப்பொழுதே சொல்லவில்லை?"

"டாக்டர்கள் தங்களுடைய முடிவுகள் பலவற்றைக் கல்லறைக்குத்தான் எடுத்துச் செல்லுகிறார்கள்!"

டாக்டர் சஞ்சீவி போனதும், கமலநாதன் நெடுநேரம் அசையாமல் உட்கார்ந்திருந்தான். "முருகா! முருகா!" என்று கூவிக்கொண்டு, நித்தியானந்த சாமிகள் வந்தார்.

"கேள்விப்பட்டேன், உன் தாரம் தவறிவிட்டாளென்று! உடம்புக்கு என்ன செய்தது?"

கமலநாதன் பதில் சொல்லாமல், தன் புத்தக அறையில் உட்கார்ந்தான். நித்தியானந்த சாமிகள் அவனைப் பின்தொடர்ந்து வந்தார். "இதற்கு வருத்தப்பட்டு என்ன பயன்! இன்றைக்கிருப்பாரை நாளைக்குக் காணமுடியாது! மாயப்பிரபஞ்சத்தில் நிகழும் மாயாவினோதங்களில் இதுவுமொன்று. ஸ்தூல சரீரத்தைவிட்டு ஆத்மா போனதும், முன்போலவே உடல் எல்லாவற்றுடன் இருந்தாலும், தீயணைந்த சுடராகிறது. உள்ளொளி அணைந்துவிட்டால், உடல் மட்டும் இருந்தும் என்ன பெயர்? உடல் போனதைப்பற்றி நீ வருத்தப்படக்கூடாது, ஆத்மா போனவழிச் செம்மையாகவேண்டும்! உன்னைப்பார்த்தால், மிகவும் கலக்கமடைந்திருக்கிறாய் என்று தெரிகிறது. இயற்கைதான்! என்னுடைய மனைவியும்......"

கமலநாதன் உற்றுப் பார்த்தான் நித்தியானந்த சாமிகள் தன் முன்வரலாற்றைப் பற்றிச் சொன்னதில்லை.

"என் மனைவி இறந்தபொழுது நானும் அப்படித்தான் நினைத்தேன், அழுதேன், புரண்டேன், உலகமே இருண்டுவிட்டதுபோல இருந்தது, அப்பொழுது ஒரு ஞானியார் என்னிடம் 'இறந்த உடலைத் தேடாதே! இறவாத உடலைக் கண்டுபிடிக்க ஓடு! முருகனைத் தேடு! அவன் திருவருளை நாடு!' என்று உபதேசித்துவிட்டுப் போனார். அந்த உபதேசம் முதலில் சாதாரணப் பேச்சாக எனக்கு இருந்தது, பின்புதான் பிறவித்துன்பத்தை நீக்க முருகன் அருளே தேவை என்பதை உணர்ந்தேன்! உடனே என் சொத்து பூராவையும்—இந்த வீட்டைவிடப் பெரிய மாளிகை, நிலபுலம் எல்லாவற்றையும் ஒரு மடத்துக்கு எழுதிவைத்துவிட்டுத் துறவியானேன்! மாளிகையில், இல்லறத்தில் கிடைக்காத அமைதி இந்தக் காவியுடையில், துறவறத்தில் அடியேனுக்கு முருகப்பெருமான் அருள்புரிந்தார்?" நித்தியானந்த சாமிகள் மேல்நோக்கிப் பார்த்தார்.

கமலநாதன், "சாமி! நீங்கள் சொல்வது சரி! கடுமையான குற்றங்கள் செய்தவர்களுக்கு அமைதி எங்கிருந்து கிடைக்கும்?"

"குற்றங்கள் என்று தனியாகக் கிடையாது எல்லாம் விதியின் செயல்கள்! அந்த விதியை வெல்ல, ஆண்டவன் அருள் வேண்டும்! பாவங்களைச் செய்தவர்கள், உலக மாயையில் சிக்கி துன்பங்களில் அழுந்தியவர்கள், நாதன் அருள் பெற்றதும் நல்லோர்களாக ஆகிவிடுவார்கள்! பாவங்கள் தீரும்! பரமன் பதம் பெறுவர்!" நித்தியானந்த சாமிகள் உருக்கமுடன் பேசினார்.

"சாமி! என் மனம் மிகவும் குழம்பியிருக்கிறது! தற்கொலை செய்துகொண்டு இறந்துவிடலாமா என்றிருக்கிறது" கமலநாதன் மெலிந்த குரலில் வெளியிட்டான்.

"பாபம்! பாபம்! அப்படி நினைப்பதே தவறு! அப்படியானால், ஈசன்மேல்—முருகேசன்பேரில் உனக்கு நம்பிக்கையில்லையென்று தெரிகிறது! நீ அப்படிச் செய்தால், பிறவித் துன்பம் நீங்குமா? துயரங்கள் முடிவடையுமா? இல்லை. மீண்டும் வளர்ந்தபடி இருக்கும். இல்லை! அன்பனே! உலகமாயையில் சிக்கி உழன்றபொழுது, எல்லாவற்றையும் நான் செய்ததாக நினைத்து, நான் என்ற அகம்பாவத்தால் அல்லலுற்றேன். மாயாபந்தங்களை விட்டு நீங்கி, முருகப்பெருமானின் அடியேனாகி ஆனபின்தான், நிகழ்ந்தவையாவும் எனையாளும் ஈசன்செயல் என்று அறிந்தேன்! மனக் கவலையை விடு, பாரத்தை அப்பன்சாமியின் மீது போட்டுவிடு! உனக்கு விடுதலை கிடைக்கும்."

"இல்லை, சாமி! எனக்கு அமைதியே கிடைக்காது!"

"அப்பனே! உன்னைவிட மாயையில் உழன்றவர்கள், மாபாதகங்களில் சிக்கியவர்கள், அடியார்களாக மாறி பேரானந்தத்தை அடைந்திருக்கிறார்கள். கலங்காமல், வா! முருகன் கடாட்சம் உனக்கு நிச்சயமாகக் கிடைக்கும்."

"நான் என்ன செய்யவேண்டும்" கமலநாதன் கேட்டான்.

"என்னுடன் வந்துவிடு! உனக்கு தீட்சை தருகிறேன்! பின் முற்றுந்துறந்த அடியாராகி விடுவாய்!"

கமலநாதனின் முகத்தில் திருப்தி தோன்றவில்லை.

"இப்பொழுது உனக்கு யோசனையாகத்தான் இருக்கும். மாபாதகத்திலிருந்து விடுபடுவது என்றால் சுலபமானதல்ல! அதிலும் வீடு, வாசல்...முதலில் சொல்லுகிறேன், இந்த வீட்டை விட்டுவிடு."

நித்தியானந்த சாமிகள் சொல்வது கமலநாதனுக்குப் புரியவில்லை. சாமிகள் மீண்டும் விளக்கினார். "வீடு, வாசல் என்ற பந்தம் முதலில் அறுபடவேண்டும்! இந்த வீட்டை நீ ஒரு நல்ல காரியத்துக்கு—ஒரு மடத்துக்கு—ஏன் நானிருக்கும் மடத்துக்கே எழுதிவைத்துவிடு போதும்!"

கமலநாதன் நித்தியானந்தசாமிகள் சொன்னதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் இருந்தான்.

"நீ கவலைப்படாதே! உனக்காக நானே பத்திரங்கள் எழுதிவைக்கிறேன்! இன்று கிருத்திகை நல்லநாள்! முருகனுக்கு ஏற்ற நாள்! மடத்துக்கு நீ வா?"

"நான் எங்கும் வரப்போவதில்லை."

நித்தியானந்த சாமிகள் சற்று யோசித்து "நாளையிலிருந்து இந்த இடத்தையே மடமாக மாற்றிக்கொள்ளலாம்! இன்று முருகப்பெருமானுக்கு இஷ்டமான நாள்! திருவருள்பெற நல்ல நேரம்! சாயந்திரம் விபூதிப் பிரசாதங்களுடன், வீட்டை மாற்றும் பத்திரத்துடன் நான் வருகிறேன். உனக்கு உண்டாகியிருக்கும் நல்ல நினைவு மாறுவதற்குள் வந்து, உன்னை முருகன் அடியார்களின் திருக்கூட்டத்தில் சேர்த்துவிடவேண்டும்" நித்தியானந்த சாமிகள் அடிமேல் அடிவைத்து வெளியேறினார், மிகத்திருப்தியுடன். வெளியில் வந்து நின்றதும், வீட்டைப் பார்த்து "நல்ல வீடுதான்! சீக்கிரத்தில் நமக்குக் கிடைத்துவிடும்!" என்று சொல்லிக்கொண்டு அவர் போனார்.

குலசேகரனும், சகுந்தலாவும் வந்தபொழுது, நல்ல உடையுடன் கமலநாதன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்தார்கள்.

"இதோ! உனக்கு வந்த கடிதங்கள், ஒரு வாரமாக நீ வெளிவராததால் உடைக்கப்படாமல் இருக்கின்றன!" என்று குலசேகரன் ஒரு கட்டுக் கடிதங்களை அவன்முன் வைத்தான்.

கமலநாதன் அவற்றின்மீது கவனம் செலுத்தவில்லை. குலசேகரன் எதிரில் உட்கார்ந்தான்.

"நான் காவி வாங்கிக்கொள்ளலாமா என்று பார்க்கிறேன்" எனக் கமலநாதன் திடீரென்று சொன்னான். குலசேகரன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஏழெட்டுநாளாகப் பேசாமலிருந்ததற்கு ஏதாவது பேச ஆரம்பித்திருக்கிறானே என்ற திருப்தி! கமலநாதன் அடைந்துள்ள மனத்துயருக்குக் காவி எடுக்கலாமா, கமண்டலம் ஏந்தலாமா என்ற யோசனைகள் வருவது இயல்புதான்.

அதற்கென்ன அவசரம்! இன்னும் இரண்டு வாரங்கள் கழித்து நிதானமாகப் பார்க்கலாம்!"

குலசேகரன் சொன்னதன் பொருள் கமலநாதனுக்குப் புரியாமலில்லை. நிதானமில்லாமல் வந்த முடிவு என்று அவன் நினைக்கிறான். இதில் மற்றவர்களுடைய யோசனைகளைக் கேட்பதில் பலனில்லை! கமலநாதன் பெருமூச்செறிந்து உட்கார்ந்தான்.

கடிதங்களை உடைத்துக் குலசேகரன் வைத்தான், பெரும்பாலானவை ஆறுதல் கடிதங்களாயிருந்தன, நண்பர்களிடமிருந்து, தெரிந்தவர்களிடமிருந்து! ஒரு கடிதம் தங்கத்திற்கு விலாசமிடப்பட்டிருந்தது. அதைத் திறந்து பார்க்காமல், குலசேகரன் கமலநாதனிடம் தந்தான். கமலநாதன் அதைப் பார்த்தான். உடைத்துப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் எழவில்லை! "இந்தக் கடிதம் எழுதியவருக்கேத் திருப்பி அனுப்பிவிடு!"

சகுந்தலா அப்பொழுது உள் வந்தாள். முதல் தடவை அவளைக் கடுமையற்ற பார்வையுடன் கமலநாதன் வரவேற்றான்.

"உங்கள் இருவருடைய திருமணத்தைப் பற்றி, இறந்துபோவதற்கு முதல்நாள் தங்கம் என்னிடம் சொன்னாள்!"

இதுவரை வெறுப்புடன் அவர்களை நடத்தியதற்கு மன்னிப்புக் கோருவதுபோன்று அவனுடைய குரல் இருந்தது. ஆனால் அவர்களுக்கு கமலநாதன் தங்களை வெறுத்துவந்திருக்கிறான் என்ற உண்மையே தெரியாது.

"கமலநாதன்! எனக்கு என்னவோ உலகமே புரண்டுவிட்டது போலிருக்கிறது! அவள் எனக்கு ஒரு தங்கையைப்போல் இருந்தாள், சிறுவயது முதல்! சாந்தம், நம்பிக்கை, அமைதி இவைகளுக்கு அவள் என்றும் உறைவிடமாயிருந்தாள். அவள்

பிரிந்தது, வீட்டை மூடியிருந்த மேற்கூரை பிரிந்து விழுந்ததைப் போலிருக்கிறது! நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை, அவள் நன்ருகக் குணமடைந்துவருகிருளென்று நினைத்தேன்; கவலை நீங்கியதென நிம்மதியுடன் இருந்த பொழுது......குலசேகரனின் கண்களில் நீர் கசிந்தது, சகுந்தலா தலையைத் தாழ்த்தி, உட்கார்ந்திருந்தாள். அவளும் கண்ணீர்விட்டுக்கொண்டிருக்கிருள் என்று தெரியாது.

அவர்களைப் பார்க்கும்பொழுது, கமலநாதன் உள்ளத்தில் ஒருகணம் பொருமை தலைதூக்கியது! தங்கத்திற்காக அவர்களால் கண்ணீரை—களங்கமற்ற குற்றமற்ற கண்ணீரைவிடமுடிகிறது. ஆனல் கமலநாதன் தனியாக வடித்த கண்ணீரில் மாசுபடிந்திருந்தது; அவன் பட்ட வேதனை குற்றவாளி படும் வேதனையாகும். அந்த இரண்டு பேர் அருகில் உட்கார்ந்திருந்தபோதிலும், அவர்களிடமிருந்து—உலகத்திடமிருந்து விலகித் தனியாகக் கதறிப் புலம்பவேண்டும்போலிருந்தது. நித்தியானந்த சாமிகள் செய்த உபதேசம் மறுபடியும் அவன் கவனத்துக்கு வந்தது. துறவியாகித் தூரத்துக்குப் போய்விடுவது நல்லது. அந்த வீடு, அவர்கள் எல்லாம் பழைய நினைவுகளை—அவன் செய்த குற்றத்தைக் காட்டிக்கொடுத்துக்கொண்டிருந்தன.

ஆனல் அவனுடைய சட்ட உள்ளம் அவனை அச்சுறுத்தியது. குற்றவாளி தப்பித்துப்போக ஒருநாளும் உதவக்கூடாது. குற்றத்துக்கான தண்டனை தரப்படவேண்டும். குற்றம் செய்தவர்கள் யாராயிருந்தாலும், சட்டத்தின் நீண்ட கரம் மடிந்துவிடக்கூடாது.

கமலநாதன் யோசனையில் ஆழ்ந்துவிட்டதைப் பார்த்ததும், குலசேகரனும் சகுந்தலாவும் எழுந்தார்கள். "நான் போய்வருகிறேன்!" குலசேகரன் சொன்னதைக் கமலநாதன் கேட்டதாகத் தெரியவில்லை,

மாலை நித்தியானந்தசாமிகள் மிகப் பரபரப்புடன் வந்தார்.

"காக்கவைத்துவிட்டேன்! முருகா!" என்று அவர் உட்கார்ந்தார். "வரும் வழியில் சிவானந்தர் என்பவரைப் பார்த்தேன், அதனல்தான் நாழியாகிவிட்டது! சாமி சிவானந்தரை உங்களுக்குத் தெரியுமா? அவரும் உங்களைப்போல, படித்து நன்ருக இருந்தவர்! ஜட்ஜாகக்கூடக் கடைசிக்காலத்தில் வேலை பார்த்தார்! பின் ஞானமார்க்கத்தில் ஈடுபட்டு இப்பொழுது சாமியாகத் தீட்சைபெற்றிருக்கிருர்! நம்மைப் பார்த்தால், ஏதாவது சித்தாந்த விஷயமாக அவர் பேசாமலிருக்கமாட்டார்! மிக ஞானஸ்தர். சம்பிரதாயங்கள் தெரிந்தவர். வெளிநாடுகளுக்குப் போய், இந்துமதச் சிறப்பைப் பற்றிப் பேசப்போகிருராம்! உலகில் நமது பூமிதான் கர்மபூமியாகும்! இங்கிருந்துதான் ஞானமார்க்கம் தழைக்கவேண்டும்! உங்களைப் பற்றிக்கூட அவரிடம் சொன்னேன்! அடியார் திருக்கூட்டத்துக்கு மற்ருெரு புனிதர் வருவதுபற்றி அவர் மகிழ்ந்தார்!"

கமலநாதன் அவரை மறுத்து "நான் இப்பொழுது நிச்சயமாக ஒன்றும் சொல்வதற்கில்லை! மடத்திற்கு வருவதற்குப் பதில், நான் மறுபடியும் போய் கோர்ட்டில் நிற்கவேண்டி ஏற்படலாம்" என்று சொன்னுன்.

நித்தியானந்த சாமியின் முகத்திலிருந்த களை சற்றுத் தளர்ந்தது. "ஒன்றும் அவசரப்படவேண்டியதில்லை! எந்த உடையில், எந்த நடையில் இருந்தால் என்ன? முருகன் அருள் இருந்தால் போதும்! காவியுடையில் தான் இருக்கவேண்டும் என்ற நியதியில்லை. தாமரையிலைத் தண்ணீர்போல, இருக்கமுடிந்தால் நல்லதே" என்று தன் சுதியை அவர் மாற்றிக்கொண்டார். கமலநாதனின் வீட்டைத் தன் மடத்தின் பேருக்கு—அதாவது தன்பேருக்கு மாற்றிக்கொள்ள அவர் போட்ட திட்டம்—வீணுகிவிடும்போலிருந்தது! இருந்தாலும் மனங்கலங்காமல், கடைசிமுறையாக ஒரு முற்றுகை போடலாம் என்று நித்தியானந்த சாமிகள் நினைத்தார்.

"ஒரேநாளில் திடீரென்று மாறிவிடுவது என்பது முடியாதகாரியம்! அது கீழ்ப்படியிலிருந்து பத்துப் படிகளை ஒரே தாவுதலில் தாண்டிவிட முயல்வதுபோலாகும். ஒவ்வொரு படியாக ஏறித்தான் போகவேண்டும். முதலில் கேட்டல், பின் படித்தல், படித்தவற்றை நினைத்தல், இப்படிப் படிப்படியாக ஞானமார்க்கத்தை அறியவேண்டும், அத்துடன் ஞானமார்க்கத்து உதவிபுரிதல், அதைப் போற்றி வளர்த்தல், முருகப்பெருமானுக்குப் பிரியமான காரியங்களில் ஈடுபடுதல், இப்படி வளர்ந்து, பின் ஞானியாக மாறவேண்டும். இப்பொழுது நான் பார்த்துவரும் மடத்தில் பல காரியங்கள் பணமில்லாமல் முடங்கிக்கிடக்கின்றன."

கமலநாதனுக்கு அவர் போனல் போதுமென்ருகிவிட்டது. "உங்களுக்கு எவ்வளவு வேண்டும்?" என்று அவன் கேட்டான்.

"ஒன்றும் அதிகம் வேண்டாம்! ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தால் போதும்."

" சரி!" என்று கமலநாதன் எழுந்து தன் பீரோவைத் திறந்து, செக் புத்தகத்தை எடுத்தான், நூறு ரூபாய் நோட்டுகள் இரண்டு அதனுள்ளிருந்தன.

கமலநாதன் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு செக் எழுதித்தந்தான்.

" நீங்கள் கொடுப்பது நல்ல புண்ணிய காரியத்துக்குச் சேருகிறது!" என்று திருப்தியுடன் சாமிகள் வாங்கிக்கொண்டார்.

நித்தியானந்த சாமிகள் " முருகா! முருகா!" என்று கூறிக்கொண்டு எழுந்து விடைபெற்றுக்கொண்டார். கமலநாதன் உட்கார்ந்தான். வெளியே வந்த நித்தியானந்தசாமிகள் "ஆ!" என்ற கூச்சல்கேட்டு திடுக்கிட்டுப் பார்த்தார், எதிரில் சகுந்தலா நின்றிருந்தாள்.

" நீ எப்படி ஜெயிலிலிருந்து தப்பி வந்தாய்?"

" பாவி, நீ எங்கே இங்குவந்தாய்?" சகுந்தலா கூச்சலிட்டாள்.

" சத்தம்போடாதே!"

சத்தம் கேட்டு, கமலநாதன் வெளிவந்தான். " என்ன கூச்சல்!"

" ஒன்றுமில்லை! யாரோ தப்பியோடிய கைதி இங்கே நுழையப்பார்க்கிறாள்" என்று நித்தியானந்தம் நடக்க முயற்சித்தார்.

" போகாதே!" என்று சகுந்தலா முன் வந்தாள்.

" யாரும் கைதியை இங்கு காணுமே! யாரை நீங்கள் பார்த்தீர்கள்?" என்று கமலநாதன் சுற்றிலும் பார்த்தான்.

" இவள்தான்" நித்தியானந்த சாமிகள் சகுந்தலாவைக் காட்டினார்.

கமலநாதன் சிரித்தான். " அவர்கள் விடுதலையடைந்து ஒரு மாதத்துக்கு மேலாகிறதே! நித்தியானந்த சாமிகளை உனக்குத் தெரியுமா?" என்று சகுந்தலா பக்கம் திரும்பிக் கேட்டான்.

" நித்தியானந்தசாமிகளா? பெயரை மாற்றிக்கொண்டானா? எங்களூரில், முருகதாசன் என்ற பெயரில் உலவிய வேடதாரி! வஞ்சகன்! காமாந்தகன்!"

" சீ! வாயை மூடு."

சகுந்தலா அழுதுகொண்டே கூறினாள். " பல பெண்களைக் கெடுத்தவன் தன் வேடத்தால், பலாத்காரத்தால். நானும் இவன் கையில் சிக்கி......" அவள் நிலைகுலைந்து உட்கார்ந்து, முகத்தைக் கையால் பொத்திக் கொண்டாள்.

" அப்படியா?" என்று கமலநாதன் சாமியாரின் கையைப் பிடிக்கப்போனான்! சாமியார் உதறிக்கொண்டு, " எட்டிநில்!" என்று எச்சரித்து, இடுப்பிலிருந்து பெரிய கத்தியை விரித்தார்.

அருள், அறம், காவி, கமண்டலம் என்று பேசிக்கொண்டிருந்த சாமியாரின் கையில் கத்தியைப் பார்த்ததும், சகுந்தலா சொன்னது உண்மை என்பதைக் கமலநாதன் நிச்சயித்துக்கொண்டான்.

" என்ன சாமியாரே! இந்தக்கோலம்?" ஏளனத்துடன் அவன் கேட்டான்.

" மூடா, உள்ளேபோ!" என்று சாமியார் கத்தியை ஆட்டினார்.

கமலநாதன் பின்னால் நகர்ந்தான். சாமியார் கத்தியை ஓங்கியபடி அவனைத் தள்ளினார். சகுந்தலா ஒரு பலகையை எடுத்து பின்பக்கமாக அடிக்கவந்தாள். சாமியார் பெரிய முரட்டாத்மாவாக இருக்கவேண்டும். இடது கையால் தடுத்து, பலகையைச் சகுந்தலாவின் தலைமீதே போடச்செய்தார். சகுந்தலா தள்ளாடிக்கொண்டு விழுந்தாள்.

அறைக்குள் கமலநாதனைத் தள்ளியதும், சாமியார் அவன் பெட்டியைத் திறந்து, அதிலிருந்து நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொண்டார்.

" இதோ! உன் செக்!" என்று ஆயிரம் ரூபாய் செக்கை கமலநாதன் முகத்தில் வீசியெறிந்தார். கமலநாதன் திக்பிரமையடைந்தவன்போல நின்றான். சாமியார் திரும்பினார் வெளியேற.

கமலநாதனுக்கு இப்பொழுதுதான் உணர்வு வந்தது. சாமியார்மீது பாய்ந்தான். கத்தி கீழே விழுந்தது. எதிர்பாராதவகையில் கமலநாதன் தாக்கியதால், சாமியார் கீழே விழுந்தார். ஆனால் சாமியாருக்கு ஈடுகொடுக்க கமலநாதனால் முடியவில்லை. இரண்டு குத்துவிட்டு புறத்தே தள்ளிவிட்டு, சாமியார் கத்தியை எடுத்துக்கொண்டு வெளியே ஓடிவிட்டார். சாமியாரிடமிருந்து கத்தியைத் தட்டியபொழுது, அறுபட்டு, கமலநாதன் கையிலிருந்து இரத்தம் கொட்டியது.

கமலநாதன் மாடிக்குப் போய், தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்துத் தன் பையில் போட்டுக்கொண்டு, கீழேவந்தான். சகுந்தலா முன்போலவே தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். கமலநாதன் காரை எடுத்துப்போகும் சத்தம் கேட்டது.

(தொடரும்)

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள்!

காரைக்குடியில் வெள்ளத்தாலும், புயலாலும் தாக்குண்ட பெரிய மாடிவீடு இடிந்து, சரிந்து, வீழ்ந்துகிடக்கின்றது.



காரைக்குடியில் நெசவாளர் பகுதியில், புயலால் தாக்கப்பட்டுப் பாழாய்ப்போன நிலையில் காட்சிதரும் ஒரு நெசவுத் தொழிலகம்.

புனலாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட தஞ்சை—திருச்சி—மதுரை — இராமனாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்கரை ஓரப்பகுதிகள், வளமிழந்து, நலமிழந்து, ஒளியிழந்து, **உயிரிழந்து, வாட்டமும்** வேதனையும் கலந்த தோற்றத்தோடுதான் இன்னமும் காட்சியளித்துவருகின்றன. அவற்றின் இரங்கத்தக்க நிலையை அண்மையில்தான் நான் நேரிற் சென்று பார்த்துவிட்டுத் திரும்பினேன்.

புயலும் மழையும் பெருந்தொல்லைகளைக் கொடுத்தன என்றாலும், கடல் கொந்தளிப்பு, ஆற்றின் வெள்ளப்பெருக்கு, ஏரி—குளம் உடைப்பு ஆகியவை ஆங்காங்குக் கொடுத்துள்ள துன்பமும், இழைத்துள்ள கேடும், அம்மம்ம, எண்ணிப்பார்க்கவே உளம் கூசுகிறது.

வேதாரண்யம்—தோப்புத்துறைப் பகுதியில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஐநூற்றிலிருந்து அறுநூறு வரையில் இருக்கக்கூடும் என்று ஊகிக்கிறார்கள். கால்நடைகளும், விலங்கினங்களும் பெரும் அளவில் மடிந்துபோயிருக்கின்றன. நான் புயல் வீசிய பிறகு பன்னிரண்டு நாட்கள் கழித்துச் சென்று பார்த்தபோதும், சாலையின் இருமருங்கிலிருந்தும் பிணநாற்றம் வந்து மூக்கைத் துளைத்தது. சில மனிதர்களின் பிணங்கள் மட்டுமல்லாமல். ஆடு, மாடு, நாய், நரி ஆகியவற்றின் பிணங்களும் அந்தப் பிணநாற்றத்திற்குக் காரணம் என்று தெரியவந்தது. காக்கைகளும், பிற பறவைகளும் நூற்றுக்கணக்கில் சாலையின் பக்கங்களிலெல்லாம் செத்துக்கிடந்தன.

மரங்களில் பெரும்பாலானவை வேரோடும், வேரடி மண்ணோடும் பெயர்ந்துகிடக்கின்றன. வேதாரண்யம், தோப்புத்துறைப் பகுதிகளில் மரங்கள், செடிகள், கொடிகள் ஆகியவை இலைகளையெல்லாம் அடியோடு உதிர்த்துவிட்டுத், தரையோடு தரையாய்ச் சாய்ந்து வெறும் மிலாறுகளாகக் காட்சியளிக்கின்றன, குடிசைகளெல்லாம் தலைவிரிகாலமாய்ப் பிய்த்தெறியப்பட்டு அப்படியே தரையோடு உட்கார்ந்துவிட்டன.

தோப்புத்துறைப் பகுதியில் கடல்நீர் பத்து அடி எழும்பி சுமார் ஒருமணிநேரம் ஊருக்குள் பரவிநின்று பின்னர் திடீரென வடிந்திருக்கின்றது. கடல் நீர் திரும்பி வடிந்து செல்லும்போது வீடுகளையும், பொருள்களையும், மக்களையும் அடித்துக்கொண்டு போயிருக்கிறது. நள்ளிரவில் வந்த கடல் வெள்ளத்தில் நீந்தத் தெரிந்தவர்கள் நீந்தியும், நீந்தத் தெரியாதவர்கள் அலையால் அடித்துக்கொண்டுபோகும் போதும் அப்படி அப்படியே மரங்களையும், தந்தி மரங்களையும், தந்திக்கம்பிகளையும், வீட்டின் முகடுகளையும், மின்சாரக்கம்பித் தூண்களையும் பிடித்துக்கொண்டு உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முயன்றிருக்கிறார்கள். அத்தகைய நிலைகளிலேயே சிலர் உயிரைவிட்டிருக்கிறார்கள். மரங்களிலிருந்தும். தந்திக் கம்பிகளிலிருந்தும் பிணங்கள் அகற்றப்பட்டிருந்திருக்கின்றன. பல பிணங்கள் இருப்புவழியின் ஓரத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிறுவன் பனைமரத்தைப் பிடித்துக்கொண்டு நீண்டநேரம் இருந்ததால், அவன் அலையாலும், காற்றாலும் மரத்தோடு சேர்த்து உராயப்பட்டு அவனது மார்பு, வயிறு, கை, கால் ஆகியவற்றின் தோல்கள் அப்படியே அகன்றுபோய், இப்பொழுது அவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறான். பலராக இருந்த சில குடும்பங்கள் அடியோடு அழிந்து போயிருக்கின்றன ; சில குடும்பங்களில் ஒருவர் இருவர் மட்டுமே மீதியாகியிருக்கின்றனர். நான் பாதிக்கப்பட்ட ஒருவரைப் பார்த்து விவரம் கேட்டபோது, அவர் பத்துபேர் கொண்ட தமது குடும்பத்தில் தாமும், தம்முடைய எட்டுவயதுப் பையனும் தவிர மற்றையோர் அனைவரும் வெள்ளத்திற்கு இரையாகிவிட்டனர் என்று தெரிவித்தார். இப்படியே பலரும் தங்கள் தங்கள் சோகக் கதைகளை விதவிதமாகக் கூறினர். இறந்துபட்டோரில் பெரும்பாலோரும், இப்பொழுது வாழ ஏதொரு வகையும் இன்றித் தவிப்போரில் பெரும்பாலோரும் சேரிவாழ்த் தாழ்த்தப்பட்ட மக்களாவார்கள். அவர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வசிக்க வீடின்றிச் சத்திரத்திலும், சாவடியிலும், புகைவண்டி நிலையத்திலும் முடங்கிக்கிடக்கிறார்கள். திக்கற்றுக் கிடப்பவர்க்கு வேதாரண்யம் பகுதியில் ஆங்காங்குக் கஞ்சிவார்க்கப்படுகிறது. வேதாரண்யத்தின் ஒருபகுதியில், திக்கற்றவர்களைத் தெருவில் வரிசையாக உட்காரவைத்து, அவர்களுக்கு நண்பகலில் கஞ்சிவார்க்கப்படும் காட்சியே இவ்விதழின் அட்டைப் படமாகக் காட்டப்பட்டிருக்கிறது.



வேதாரண்யத்தை அடுத்த தோப்புத்துறையில், கடல் கொந்தளிப்பால் மூழ்கடிக்கப்பட்டு, அலையெழுச்சியால் அலைக்கழிக்கப்பட்டுப், புயற்காற்றால் பிய்த்தெறியப்பட்ட பெரிய வீடு ஒன்றின் இடிபாடுகள் வெறும் செங்கற் குவியலாகக் காட்சியளிக்கின்றன.



தோப்புத்துறைக் கடற்கரையிலிருந்த பெரிய மரப்படகு ஒன்று, கடல் எழுச்சியால் ஊருக்குள் ஒன்றரை மைல் தொலைவு தள்ளப்பட்டு, வீடு ஒன்றில் மோதி, அதனை இடித்து, உடைந்துபோய்க் கிடக்கின்றது.

பிற மாவட்டப்பகுதிகளில் உயிர்ச்சிதைவு மிகவாக ஏற்படாவிட்டாலும், பொருட்சிதைவும், கால்நடைச் செல்வச் சிதைவும் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன. ஆங்காங்குள்ள பெரிய தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்துவிட்டன; சிறிய தென்னை மரங்கள் தலை சாய்ந்து தொங்குகின்றன; வாழைமரங்கள் இடைமுறிந்து சின்னாபின்னமாகிக் கிடக்கின்றன.

எல்லா இடங்களிலும் பொதுவாகச் சேரிகள்தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுப்போய்விட்டன என்று சொல்லவேண்டும். பொதுவாகத் தென்னங்கீற்று, பனையோலை ஆகியவைகளால் வேயப்பட்ட மண்குடிசைகள் அனைத்தும் புயலாலும் புனலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சரிந்து உட்கார்ந்துவிட்டன. பொதுவாகக் குடிசைகளில் வாழ்ந்தோரும்—வாழ்வோரும்தான் மீளாத் துக்கத்திலும் துயரத்திலும் ஆங்காங்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தகையோரின் துயரைக் களைய பொதுவாகப் பொதுமக்களும், குறிப்பாகச் சென்னை மாநில அரசும், சிறப்பாக இந்தியப் பேரரசும் தொடர்ந்து பாடுபட்டால்தான் அவர்களின் நிலைமை ஓரளவுக்குச் சீர்படும்.

காரைக்குடிப் பகுதியில் ஏழை எளியவர்களான நெசவாளர்கள் மீளாத் துயரத்தில் ஆழ்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலோரின் குடிசைகள் கவிழ்ந்து; தறிகள் நொருங்கிக் கிடக்கின்றன. அவர்கள் வாழ்வதற்கும் இடமில்லை; தொழில் நடத்துவதற்கும் வகையில்லை. அவர்களுக்கான வசதியையும், வகையையும் அரசாங்கம் செய்ய முன்வரவேண்டியது இன்றியமையாததாகும்.

அரசாங்க அதிகாரிகளின் போக்கு பெரும்பாலான இடங்களில் குறையுடையதாகவே இருந்துவருகிறது. பாதிக்கப்பட்டோரின் குறைகளைக் கேட்டறியும்போது, அரசாங்க அதிகாரிகளில் மிகச்சிலரைத்தவிர, பெரும்பாலானோரிடத்தில் நாணயம்—நேர்மை—நீதி—சுறுசுறுப்பு ஆகியவை போதுமான அளவுக்கு இல்லை என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. பாதிக்கப்பட்டோர்க்கு என்று அனுப்பிவைக்கப்பெறும் உணவும், உடையும் பொருளும் சரியானபடி போய்ச் சேரவில்லை என்ற செய்தி அடிக்கடி பல இடங்களிலிருந்து வந்தவண்ணமிருக்கிறது. இத்தகைய குற்றங்களும், குறைகளும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளக்கூடிய நல்ல அதிகாரிகளைக்கொண்டு நிவாரண வேலைகள் நடத்தப்படவேண்டும் என்பதை அரசியலார்க்கு அறிவுறுத்த வேண்டியிருக்கிறது. ஆங்காங்குள்ள பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் குறைபாடுகளையும், வேண்டுகோள்களையும் ஓயாமல் அதிகாரிகளிடம் உணர்த்திக்கொண்டிருந்தால்தான், சிறிதளவு நன்மையையாவது பெற வழி பிறக்கும்.

வெள்ளத்தால் அடிக்கடி பாதிக்கக்கூடும் என்று ஐயப்பாட்டிற்குரிய பகுதிகளில், மீண்டும் குடியேற மக்களை அனுமதிக்காமல், மேட்டுப்பாங்கான புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கு ஒதுக்கித்தந்து, அங்கு வீடுகட்டிக் கொள்வதற்கான வசதிகளையும் செய்துதர அரசாங்கம் முந்துறவேண்டும். அதற்கான திட்டங்களை அரசாங்கமும், மாவட்டாண்மைக் கழகங்களும், நகராண்மைக் கழகங்களும் தீட்ட வேண்டும். வாடகை வீடுகளைக் கட்டித்தரவும் அவைகள் முயலவேண்டும். இல்லாவிட்டால் அடிக்கடி வெள்ளத்தால் பாதிக்கப்படும் துக்கச் செய்திகளைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டி ஏற்படும்.

புயலால் பாதிக்கப்பட்டுப் பாழான பகுதிகள், வளம்பெற்று நலம்பெற இன்னும் எத்துணை ஆண்டுகள் பிடிக்குமோ என்று எண்ணும்போது, வேதனைதான் உள்ளத்தைக் குடைகிறது! 'கடமையை ஆற்றிக் களிப்பினைப் பெற முயலுவோம்' என்று எண்ணிதான் ஆறுதல்பெறவேண்டியிருக்கிறது!

—இரா. நெடுஞ்செழியன்.

பெண்ணாக நடித்த பொய்யன்

[எழினி]

திருமணம் நடந்தேறிச் சில ஆண்டுகள் ஆகின்றன. தலைவனும் தலைவியும் அறநெறியில் நின்று, செல்விருந்து ஓம்பி, வருவிருந்து எதிர்பார்த்து இல்லற வாழ்வில் இனிது வாழ்ந்து வருகின்றனர்.

தலைவனது செல்வச் செழிப்பையும், அழகுத் தோற்றத்தையும், புதுமை காணும் பண்பையும், இன்பத்துறையிலே காட்டும் ஆர்வத்தையும் கண்ட பாணன் ஒருவன், எப்படியேனும் தலைவனுக்கு நண்பனாகி, அவனைப் பரத்தையர் இல்லத்திற்கு அழைத்துச்சென்று, அவனையும் மகிழ்விக்கச்செய்து, அதன் காரணமாகத் தானும் பொருளீட்டிக்கொள்ளவேண்டும் என்று திட்டமிடுகிறான். ஆளை மயக்கி நண்பனாக்கிக்கொள்ளும் அறிவும் ஆற்றலும் நிரம்ப உண்டாதலால், அவன் தலைவனை நெருங்கித், தலைவனோடு மெல்ல மெல்லப் பழகிச், சிறிது நாளில் தலைவனுக்கு உற்ற நண்பனாகிவிடுகிறான்.

தலைவனைத் தனியே உலாவிற்கு அழைத்துச்செல்வதும், பரத்தையர் பலரின் அழகைப் பற்றியும், அவர்கள் கற்றறிந்துள்ள காதற் கலையைப்பற்றியும், அவர்களோடு சேர்ந்து வாழ்வதால் எப்படிப்பட்ட இன்பத்தை இடைவிடாது நுகர்ந்துகொண்டிருக்கலாம் என்பதைப் பற்றியும் அடிக்கடி எடுத்துச் சொல்லுவதும் ஆன பணிகளில் பாணன் விடாமுயற்சியோடு ஈடுபடுகிறான். தலைவன் முதலில் அவைகளையெல்லாம் வேடிக்கைக் கதைபோல் கேட்டுவருகிறான். பரத்தையர் பால் காதல் கொண்டு போதல் ஆன்றோரும் சான்றோரும் வகுத்த ஒழுக்க நெறிக்கு மாறுபட்டதாகுமே என்று அஞ்சிப் பாணன்வீசியவலையில் நெடிது நாட்கள் விழாமல் தன்னைத்தானே காத்துக் கொண்டு வருகிறான். பரத்தையர் வீட்டுக்குப் போவதால் யாதொரு தவறுமில்லை, செல்வ மக்கள் எவ்வளவோ பேர்கள் பரத்தையர் சேரியிலிருந்து இன்பம் நுகர்ந்து வருகிறார்கள் என்று பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கித் தலைவனது உள்ளத்தைக் குழப்புகிறான் பாணன்.

பாணனது அன்புச் சொற்களையும், அழகுச் சொற்களையும் கேட்டுக் கேட்டுத் தலைவனது மனமும் சிறிது குழப்பமடையத் தலைப்படுகிறது. 'பழகப்பழகப் பாலும் புளிக்கும்' என்பதைப்போல், தலைவியோடு இருந்து பெறும் இன்பம் தலைவனுக்குச் சிறிது கசப்பாகத் தோன்றுகிறது. வேறு புதுமை இன்பங்களைக் காணவேண்டும் என்ற ஆவல் அவனைத் தூண்டத் துவங்குகிறது. பரத்தையரைப் பற்றிப் பாணன் சொல்லியவைகளைக் கேட்டுக் கேட்டுவந்த தலைவனுக்கு, இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதைப்போல், பரத்தையர்பால் பெறும் இன்பம், தான் தலைவியோடு இருந்துபெறும் இன்பத்தைக்காட்டிலும் நன்றாக இருக்கக்கூடும் என்று எண்ணிக் கொள்கிறான். பாணன் தன் முயற்சியில் வெற்றிபெறுகிறான். தலைவன் பரத்தையர் வீடு செல்ல ஒருப்படுகிறான்.

ஒருநாள் இரவு தலைவியும் தோழியும் அறியாவண்ணம், தலைவன் பாணனோடு பரத்தையர் சேரி நோக்கிப் புறப்படுகிறான். பரத்தையர் சேரியில் பாணன் தலைவனுக்கு நாளுக்கு ஒரு பரத்தை வீதம் அறிமுகப்படுத்திவைக்கிறான். தலைவன் தலைவியை மறந்து, வீட்டை மறந்து, கடமையை மறந்து பரத்தையர் தரும் இன்பத்தில் திளைத்துக் கிடக்கிறான்.

தலைவனைக் காணாது தலைவியும் தோழியும் பெருந்துயருறுகிறார்கள். தோழி தலைவனை எங்கெங்கும் தேடிப்பார்க்கிறாள்; யார் யாரையோ கேட்டுப் பார்க்கிறாள்; தலைவன் அகப்பட்டபாடில்லை. தலைவன் பண்புள்ளம் கொண்டு வாழ்ந்துவந்தவனாதலால், அவன் பரத்தையர் சேரிப்பக்கம் சென்றிருக்கமாட்டான் என்ற துணிவில், அந்தப்பக்கம் தேடிப் பார்க்கத் தோழி முயற்சி எடுக்கவில்லை.

சிலநாட்கள் கழிந்தன. தலைவனைப் பரத்தையர் சேரியில் கண்டதாகவும், அவன்

பெண் வேடம் போட்டுக்கொண்டு, பரத்தைப் பெண்களோடு சேர்ந்து, கைகோர்த்து ஆடும் துணங்கைக்கூத்து ஆடுகிறான் என்றும் சிலர் தோழியிடமும், தலைவியிடமும் செய்தியைத் தெரிவிக்கிறார்கள். இச்செய்தியைக் கேள்வியுற்றதும், தலைவி, மீளா வருத்தத்தில் ஆழ்ந்து மிக்க வாட்டமுறுகிறாள். தலைவனைச் சென்று பார்த்துவரலாம் என்ற எண்ணத்துடன், தோழி, பரத்தையர் சேரி நோக்கிப் புறப்படுகிறாள்.

தலைவன் பெண்களைப்போல் இடிமயிர் வைத்துத் தலைவாரிப் பின்னிக்கொண்டு, மாலை சூட்டிக்கொண்டு, கைகளில் வளையல்கள் மாட்டிக்கொண்டு பரத்தைப் பெண்களோடு சேர்ந்து துணங்கைக்கூத்து ஆடிக்கொண்டிருக்கிறான். பரத்தையர் சேரியில் நுழைந்தவுடன் விழாக்களத்தில் துணங்கைக் கூத்து நடைபெறும் செய்திகேட்டுத் தோழி விரைவாக அந்த இடத்திற்கு நடந்து செல்கிறாள். தலைவனைக் கையோடு பிடித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு தோழி செல்கிறாள்.

துணங்கைக்கூத்து நடைபெறும் இடத்திற்குத், தோழி வந்துகொண்டிருப்பதைச் சிறிது தொலைவில் வரும்போதே தலைவன் கண்ணுறுகிறான். தலைவன் தோழிக்கு அஞ்சியும், வெட்கப்பட்டுக்கொண்டும் அந்த இடத்தைவிட்டு மெல்ல நழுவி வேறுபக்கமாக விரைந்து செல்கிறான். தலைவன், தன்னைக் கண்டதும் நழுவி ஓடுகிறான் என்பதை அறிந்துகொண்ட தோழி, வேறு ஒரு தெருப்பக்கமாகச் சென்று அவனை எதிர்ப்படலாம் என்று கருதிக்கொண்டு, வேறோர் தெருப்பக்கம் ஓடுகிறாள். வேறோர் நீண்ட தெருவின் வளைந்த முனைப்பக்கம் பெண்வேடம் தாங்கிய தலைவன் திரும்பும்போது, தோழி எதிர்படுகிறாள்.

தலைவன் தோழியைக் கண்டுகொள்ளாததுபோல் நாணிக்கோணி ஒருபக்கமாக ஒதுங்கிச் செல்ல முற்படுகிறான். தோழி அவனைப் பார்த்து, "ஏடா! நில்லுடா!" என்கிறாள்.

அதற்குத் தலைவன் "யாரைப் பார்த்து ஏடா என்கிறாய்? என்னை ஒரு ஆண்மகன் என்று நினைத்துக்கொண்டாயோ? உனக்குக் கண் என்ன குருடா?" என்று கேட்கிறான்.

அதற்குத் தோழி, "என்னுடைய கண் இன்னமும் அப்படியொன்றும் ஆகிவிடவில்லை. உன்னை யார் என்று நன்றாக அறிந்துகொண்டுதானே உன்னைப் பிடிக்க ஓடோடி வருகிறேன். நீ ஒன்றும் என்னை ஏமாற்ற முடியாது. உள்ளதைச் சொல். நீ எப்பொழுது இங்கு வந்தாய்?" என்று வினவுகிறாள்.

"என்மேல் காணப்படுவது பசலை என்று நினைத்துக்கொண்டு, உள்ளதைச் சொல் என்று கேட்கிறாயே! இது பசலையல்ல, அழகுக்காகப் பூசப்பட்ட மணமுள்ள பொடி," என்று பேச்சை மாற்றித் தலைவன் விடை கூறுகிறான்.

"ஏடா! ஏன் உன்னை மறைத்துப் பேசுகிறாய்? உன்னை யாரென்றுதான் எனக்கு நன்றாகத் தெரிகிறதே! ஏன் என்னோடு வீணாக விளையாடிக்கொண்டிருக்கிறாய்?" என்று தோழி வினவினாள்.

அதற்குத் தலைவன், "நீ என்னை வம்புக்கு இழுத்து விளையாடுகிறாயா? நான் உன்னோடு விளையாடுகிறேனா? ஏன் என்னைப்போன்ற பரத்தையரிடம் வந்து வீண் வம்பு வளர்க்கிறாய்?' என்று கேட்கிறான்.

"நானா வீண் வம்பு வளர்க்கிறேன்? ஏடா! உன் அழகான பண்புள்ள மனைவி மனையகத்தே வருந்தி வாடிக்கொண்டிருக்கும்போது, நீ இங்குக் கூத்தடித்துக் கும்மாளமா போட்டுக்கொண்டிருக்கிறாய?" என்று சுடுசொல் வீசுகிறாள்.

"நான் என் குலத்துக்கு ஏற்ற விளையாட்டு விளையாடினால், அதனால் உனக்கென்ன? நீ ஒன்றும் என்னைக் கேட்கவேண்டியதில்லை!" என்று சொல்லிவிட்டுத் தலைவன் மேற்கொண்டு நகர ஆரம்பிக்கிறான்.

"ஏடா! உனக்குச் சிறிதுகூட வெட்கமில்லையா? பெண் வேடம் தாங்கி இங்கு ஆட்டம் ஆடுகிறாயே! உனக்கு அழகாக இருக்கிறதா?" என்று அதட்டிக் கேட்கிறாள். அதற்குள் தலைவன் விறுவிறு என்று போய்விடுகிறான். வேறு வழியின்றித் தோழி வீடு நோக்கித் திரும்பி விடுகிறாள்.

சிலநாட்களில் தலைவன் தன் கைப்பொருள்கள் முழுவதும் இழந்துவிடுகிறான். அவன் வறியவனாக ஆகிவிட்டதை உணர்ந்த பரத்தையர் அவனைப் புறக்கணித்து அருகில் நெருங்கவொட்டாமல் தடுத்து நிறுத்துகின்றனர். தலைவன் தன் நிலை அப்படி இழிந்து போய்விட்டதை எண்ணி எண்ணி மிகவருந்தி, மீண்டும் தன் இல்லம் நோக்கிச் செல்ல நினைக்கிறான். தலைவியின் உயர்வும், பண்பும், அன்பும் அப்பொழுதுதான் அவனுக்குத் தெரிய வருகின்றன. ஆனால் எப்படித் தலைவியின் முகத்தில் விழிப்பது, அவள்தான் தன்னைப்

பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறாளே என்று எண்ணி ஏங்குகிறான். தலைவியும், தோழியும் எப்படியிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காகத் தலைவன் பாணனைத் தலைவியின்பால் அனுப்பிவைக்கிறான்.

பாணன் தலைவனின் வீட்டிற்குச் சென்று தலைவி—தோழிமுன்செல்ல அச்சப்பட்டுக்கொண்டு வீட்டுக்கு வெளியில் மறைந்துகொண்டு நிற்கிறான். பாணன் வந்து வீட்டிற்கு வெளியே மறைந்து நிற்பதைத் தோழி அறிந்துகொள்கிறாள். தலைவன் அனுப்பித்தான் பாணன் வந்திருக்கிறான் என்பதைத் தோழி குறிப்பால் உணர்ந்துகொள்கிறாள். தாங்கள் தலைவன்மீது சினங்கொண்டிருக்கிறோம் என்பதைத் தலைவனுக்குப் பாணன் மூலம் அறிவிக்கவேண்டி, தோழி அதனைப் புலப்படுத்தும் முறையில் தலைவியோடு உரையாடல் நடத்துகிறாள்.

தோழி : (தலைவியைப் பார்த்து) "தலைவன் மீண்டும் வந்தால் அவனை நீ ஏற்றுக்கொள்வாயாடீ?"

தலைவி : "அவன் ஏன் வரப்போகிறான்? என்னைப்பற்றி அவனுக்கு ஏன் நினைவிருக்கப் போகிறது?"

தோழி : "அவனை அந்தப் பரத்தைச் செருக்கிகள் விரட்டிவிட்டால், அப்பொழுது அவன் இங்குதானே வரவேண்டும். அப்படி வந்தால் நீ ஏற்றுக்கொள்ளப் போகிறாயா? என்று கேட்கிறேன்."

தலைவி : "நான் ஏன் அவனை ஏற்றுக்கொள்ளப்போகிறேன்? நான்தான் அவன் முகத்தில் இனி விழிப்பதில்லை என்று முடிவுசெய்துவிட்டேனே!"

தோழி : "நான்கூட அவன் வெட்கப்படும்படியாக அன்று நன்றாகக் கேட்டுவிட்டேன்!"

தலைவி : "அன்று அவன் எப்படியடீ இருந்தான்? நீ என்னடீ கேட்டாய்? அதனை இன்னொருமுறை சொல்லு பார்க்கலாம்!"

தோழி : "அந்த வெட்கக்கேட்டை ஏன் இன்னொரு தடவை கேட்கிறாய். அவன் கொஞ்சம்கூட வெட்கப்படாமல், பரத்தையர் வலையிலே சிக்கி, அவர்கள் ஆட்டிவைத்தபடியெல்லாம் ஆடினான். அவர்களைப்போல் அவனும் பெண்வேடம் புனைந்துகொண்டு, அவர்களோடு சேர்ந்து துணங்கைக்கூத்து ஆடினான்!"

தலைவி : "உன்னைக் கண்டு அவன் சிறிதுகூட நாணப்படவில்லையா?"

தோழி : "ஏன் நாணப்படவில்லை? என்னைக் கண்டவுடன் நாணம் அவனது உயிரைப் பறித்துத் தின்றது என்றுகூடக் கூறலாம். அவன் என்னைக் கண்டவுடன் நழுவி ஓட்டம்பிடித்தான். நானும் விடவில்லை. வேறு தெருப்பக்கமாகச் சென்று அவனைத் தெருமுனையில் எதிர்ப்பட்டு நின்றேன். அவன் நாணிக் கோணி நழுவிப்போகப் பார்த்தான். நான் இழுத்துப்பிடித்து நிறுத்தினேன். அவன்தான் ஒரு பெண்ணேதான் என்று நான் நம்ப வேண்டும் என்று என்ன என்னவோவெல்லாம் சொல்லிப் பார்த்தான். நான் அவனை விடவில்லை. 'உனக்குச் சிறிதுகூட வெட்கமில்லையா?' என்று கேட்டேன். அவன் என் முன்னே நிற்கமுடியாமல் வெட்கப்பட்டுக்கொண்டு நகர்ந்துவிட்டான்!"

தலைவி : "அப்படி உன்னிடத்தில் சொல்லடி வாங்கிக்கொண்டவன் ஏன் திரும்பப் போகிறான்? எப்படி முகத்தை வைத்துக்கொண்டு அவன் நம்முன் வரமுடியும்?"

தோழி : "அவன் வரமாட்டான் என்றே நீ முடிவுசெய்துவிட்டாயா?"

தலைவி : "அவன்தான் பெண்வேடம் போடும் பேடியாகிவிட்டானே! அவன் ஏன் வரப் போகிறான்?"

இப்படித் தோழிக்கும் தலைவிக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை, ஒண்டிநின்று கேட்டுக்கொண்டிருந்த பாணன், தலைவனிடம் சென்று தலைவி சீற்றந்தணியாமல் இருக்கும் நிலையைச் செப்புகிறான். தலைவன் என்ன செய்வதென்று தெரியாமல் வருந்துகிறான்.

இது நற்றிணை 50-ஆம் செய்யுளின் விளக்கமாகும். இது மருதத்திணையைச் சார்ந்தது, 'தோழி பாணற்கு வாயில் மறுத்தது' என்னும் தன்மையைக்கொண்டதாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் **மருதம்பாடிய இளங்கடுங்கோ** என்பவராவார். இவர் சேரர் மரபைச் சார்ந்தவர். பாலைபாடிய பெருங்கடுங்கோவின் தம்பி என்று கூறப்படுகிறது. இவர் மருதத்திணையைச் சிறப்பித்துப் பாடிய பேராற்றலால் 'மருதம்பாடிய' என்ற அடைமொழியிட்டு அழைக்கப்படுகிறார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒருபாட்டும், அகநானூற்றில் இரண்டும் ஆக மூன்று பாட்டுக்கள் மட்டுமே இப்பொழுது கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

அறியா மையின் அன்னை யஞ்சிக்
குழையன் கோதையன் குறும்பைந் தொடியன்
விழவயர் துணங்கை தழூஉகஞ் செல்ல
நெடுநிமிர் தெருவில் கைபுகு கொடுமிடை
நொதும லாளன் கதுமெனத் தாக்கலின்
கேட்பார் உளர்கொல் இல்லைகொல் போற்றென
யாணது பசலை யென்றனன் அதனெதிர்
நாணிலை எலுவ என்றுவந் திசினே
செறுநரும் விழையும் செம்ம லோனென
நறுநுத லரிவை போற்றேன்
சிறுமை பெருமையிற் காணாது துணிந்தே.

[நற்றிணை—50]

[பொழிப்புரை : அம்மையே! நறிய நெற்றியையுடைய தலைவீ! நான் அறியமாட்டேன் என்று கருதிக்கொண்டு, உனக்கு அஞ்சி மயிர்முடித்து மாலைசூடிக் குறிய பசிய வளையல் அணிந்தவனாகிய விழாக்களத்தில் அவன் துணங்கை யாடுதலைக் கையோடு பிடிக்கக் கருதி நாங்கள் செல்லும்போது, நமக்கு வேறுபட்டு விளங்கும் அவன்தான் அவ்வணிகளையுடையவனாய், நீண்ட நிமிர்ந்த தெருமுனையில் வேறொருவழிவந்து புகுந்த வளைந்த இடத்தே விரைவில் வந்து எதிர்ப்பட்டானாக, " இப்படி செய்யும் உன்னைக் கேட்போருண்டோ இல்லையோ? அறிந்துகொள்!" என்று நான் கூற அவனும் ஏதும் அறியாதவன்போல என்னிடத்தில் காணப்படும் பசலை அழகுடையது என்றான்; அதற்கு எதிர்மொழிகொடுக்கத்துணிந்து, அவன் பகைவராலும் விரும்பப் படும் செம்மாப்புடையான் எனக்கொண்டு நான் வணங்கிச் செல்லாமல், என் சிறுமை பெரிதானதால் ஆராயாதே துணிந்து " ஏடா! நீ நாணமுடையவனல்லன்!" என்று கூறிவந்தேன்.

கோதை - மாலை; தொடி - வளையல்; துணங்கை - பெண்கள் சேர்ந்து ஆடும் ஒரு வகைக்கூத்து: யாணது - அழகுடையது; செறுநர் - பகைவர்.]

ஃ ஃ ஃ

தலைவன் பரத்தை வீட்டிற்குப் பிரிந்து செல்லும் தன்மையைத் தலைவி எப்படி வெறுப்போடு நோக்குகிறாள் என்பதையும், அவனைத் திரும்ப ஏற்றுக்கொள்வதற்கு அவள் மனம் எப்படி ஒருப்படுவதில்லை என்பதையும் ஆசிரியர் இச்செய்யுளில் தெளிவுபட விளக்கிக்காட்டுகிறார்.

விழாக் கொண்டாடுதல், விழாக் கொண்டாடும் இடத்தில் பெண்கள் துணங்கைக்கூத்து ஆடுதல், ஆடவர்கூட பெண்டிர் வேடம் புனைந்து கூத்து ஆடுதல்போன்ற பழக்கங்கள் இச்செய்யுளில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

787



(36)

சத்தியலோகம்

தபோலோகத்திற்கு 140 கோடி மைல்களுக்கு மேல் சத்யலோகம். அண்டசராசரங்கள் ஒவ்வொரு கல்பத்திலும் அழிந்தபின் அவற்றை மீண்டும் சிருட்டிக்கும் வேலையை மேற்கொண்ட பிரமதேவர் சத்தியலோகத்தில் இருக்கிறார்.

பிரமதேவனின் உருவத்தை வருணிக்கும் பொழுது, "பொன்னிறம், தாடி, மீசை, நான்குமுகம், நான்கு கைகள் அவற்றில் மேல் வலக்கையில் சபமாலை, கீழ் வலக்கையில் கமண்டலம், மேல் இடக்கையில் தண்டாயுதம், கீழ் இடக்கையில் சருவம்" என்று அங்க அடையாளங்கள் கூறப்படுகின்றன.

பிரமன் சிருட்டிகர்த்தாவாக இருந்தபோதிலும், அவருக்கும் ஆயுள் அளவு இருக்கிறதாம். பிரம ஆண்டுகள் நூறு போனால், பிரமா மறைந்து மற்றொரு பிரமா தோன்றுகிறார். பிரம ஆண்டென்பது மிக நீண்ட கணக்கு; பூலோகத்தில் ஒரு ஆண்டென்பது பன்னிரண்டு மாதங்கள் (365 பகல் இரவுகள்) கொண்டது. அதற்கடுத்தபடி, நான்கு யுகங்கள், கிருதயுகம் பதினேழு லட்சத்து இருபத்தெண்ணாயிரம் ஆண்டுகள்கொண்டது. திரேதயுகம் பன்னிரண்டு லட்சத்து தொண்ணூறாயிரம் ஆண்டுகளும், துவாபரயுகம் எட்டு லட்சத்து அறுபத்துநாலாயிரம் ஆண்டுகளும் கலியுகம் நாலுலட்சத்து முப்பத்திரண்டாயிரம் ஆண்டுகளும் கொண்டவைகள். இந்த நான்கு யுகங்கள் கொண்டது ஒரு சதுர்யுகம். இவ்வாறு பதினெட்டு சதுர்யுகங்கள் முடிந்ததும், ஒரு மனுவின் காலம் முடிகிறது. அதைப் போல எழுபத்துநான்கு மனுக்களின் காலம் முடிந்தால் ஒரு இந்திரனுக்குக் காலம் முடிகிறது. அந்நிலையில் இருபத்தெட்டு இந்திரகாலங்கள் பிரமனுக்கு ஒரு நாள் ஆகுமாம். அவ்வாறு முப்பது பிரமநாட்கள் கொண்டது ஒரு பிரம மாதம், பன்னிரண்டு பிரமமாதங்கள் ஒரு பிரம ஆண்டு. நூறு பிரம ஆண்டுகள் முடிந்ததும், பிரமாவிற்குக் காலம் முடிந்து, மீண்டும் மற்றொரு பிரமாவாக உதிப்பார். பிரம ஆண்டுகள் முன்னூற்றறுபதுக்கு ஒருதடவை பிரளயம் உண்டாகுமாம்.

ஒவ்வொரு கற்பத்திலும் சிருட்டியைப் புதிதாகத் தொடங்கும் வேலையில் கனம் பிரமா அவர்கள் ஈடுபட்டிருப்பார். ஆரம்பத்தில் பிரமா கடுமையான தவத்தில் உட்கார்ந்துவிடுவார். அப்பொழுதுதான் சிருட்டி செய்வதற்கான பலம் உண்டாகுமாம். சிவபெருமானின் பெருமைகளைக் கூறும் சிவபுராணங்களில் பிரமா சிவனை நோக்கித் தவமிருந்தார் என்று வரும். விட்டுணுவைப் புகழ்ந்து கூறும் வைணவ புராணங்களில் பிரமா விட்டுணுவை நோக்கித் தவஞ்செய்தார் என்றிருக்கும். எப்படியிருந்தாலும் தவஞ்செய்து, அதன் முடிவில் பிரமா சிருட்டிக்கத்தொடங்குவார்.

கீழ் மேல் உலகங்களையும், மலை, நதிகள், மேகங்கள் முதலியவற்றையும் உண்டாக்கினார். பின் ஒருகோடி சுலோகங்கள் அடங்கிய புராணத்தைச் செய்தார். அதன்பிறகு நான்கு வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும் செய்துமுடித்தார்.

பிரமதேவன் தம் மனதில் நினைத்தவாறு பத்துப்பேர்களை உண்டாக்கினார். இந்தப் பத்துப்பேர்கள்தாம், முதன்முதலாக உண்டான சிருட்டியுயிர்கள். இவர்கள் பிரமாவின் மனதிலிருந்து உண்டானவர்களாதலால், அவர்களுக்கு மானச புத்திரர்கள் என்று பெயரிடப்பட்டது. அந்த மானச புத்திரர்களாயினோர்: மரிசி, அத்ரி, ஆங்கிரசு, புலத்தியன், புலகன், கிருது. பிராச்சேதன், பிருகு, வசிட்டர், நாரதர்.

இந்தப் பத்து மானச புத்திரர்களையல்லாமல், தாய்தந்தையர் என்றில்லாமல், தந்தையரிடத்தில் மட்டும், வேறு பலரும் உதயமானார்கள். அவருடைய வலதுகை கட்டைவிரலிலிருந்து பிரசாபதியும், மார்பிலிருந்து தர்மனும், இருதயத்திலிருந்து மன்மதனும், வெளிவந்தார்கள். பிரமாவின் புருவத்திலிருந்து கோபமும், உதட்டிலிருந்து பேராசையும், மூளையிலிருந்து மாயையும், தொண்டையிலிருந்து களிப்பும், கண்களிலிருந்து சாவும் உண்டாயின.

பிரமாவின் சிருட்டி வேலையில் மானச புத்திரர்களும் உதவியாக இருந்தனர். ஆனாலும் பிரமாவிற்குத் தம் சிருட்டிவேலையில் திருப்தி கிடைக்கவில்லை. ஏதோவொரு குறையிருப்பதாக அவருக்குத் தோன்றியது. பின் யோகத்திலிருந்து, தன் உடம்பின் இடது பகுதியிலிருந்து ஒரு பெண்ணை பிரமா உண்டாக்கினார். அந்தப் பெண்—சரஸ்வதி என்று பெயரிடப்பட்டவள்—அதற்குமுன் எவரும் கண்டிராத அழகும், கவர்ச்சியும் உடையவளாக இருந்தாளாம். பிரமபுத்திரர்கள் தங்களுக்கு ஒரு அழகிய தங்கை கிடைத்தாள் என்று அவளைச் சீராட்டிப் பாராட்டினார்கள். அவளும், அந்தச் சகோதரர்கள் மத்தியில் களிப்புடன் உலவினாள். மானச புத்திரர்கள் பத்துப்பேரும், மரிசி, வசிட்டர், அத்ரி முதலானோர் தவஞ்செய்து வரம்பல பெறுவதில் ஈடுபட்டிருப்பவர்கள். சரசுவதி அவர்களுக்கு உதவியாக இருந்ததுடன், கல்வி கேள்விகளில் சிறந்தவளாகவும் ஆனாள். சரசுவதியைக் காணும்பொழுது, தம் தங்கை எவ்வளவு சிறந்தவளாக இருக்கிறாள் என்று மானச புத்திரர்கள் பெருமைப்பட்டார்கள். ஆனால் அவளைக் காணும்பொழுது பிரமாவின் நிலை வேறுவிதமாக இருந்தது.

சரசுவதியைச் சிருட்டித்தவர் பிரமா, அதனால் அவருடைய மானச புத்திரர்கள் அவளைத் தங்கையாகப் பாவித்தார்கள். பிரமா அவளுக்குத் தந்தை நிலையிலிருந்தார். ஆனாலும் அவளைப் பார்க்கும்பொழுது—அவளுடைய அழகை, தங்கநிற மேனியை, தளிர் நடையைக் காணும்பொழுது தாம் அவளுக்குத் தந்தை என்பதைப் பிரமா அடிக்கடி மறந்தார். “ஆகா! எவ்வளவு அழகு! எவ்வளவு அழகு!” என்று பிரமா சரசுவதியைப் பார்க்கும்பொழுது புதுவித ஆவல் அவர் முகத்தில் பிரதிபலித்தது.

“தங்கையே!” என்று பிரமபுத்திரர்கள் கூறிடும்பொழுது, அவர்களின் தந்தை “ஆ! என் தங்கமே!” என்று தன்னுள் கூறிக் கொண்டார்.

தம் வேலையை மறந்து, தந்தை நிலையை மறந்து, பிரமா சரசுவதியைப் பார்த்தபடி நெடுநேரம் உட்கார்ந்திருப்பார். உலகமனைத்தையும், உலகத்துள்ள உயிர்களையும் படைக்கும் பெரும் வேலையை ஆரம்பித்த பிரமா, தம் மகளின் அழகைப்பார்த்து ரசிக்கும் வேலையில் இறங்கிவிட்டார். அண்டங்களின் அளவை நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்றவர், தன் மகளின் அங்க அளவுகளை—கண்கள் எவ்வளவு அகலமிருக்கின்றன, மூக்கு எவ்வளவு அழகாக நீண்டிருக்கிறது, இதழ்கள் எவ்வாறு குவிந்திருக்கின்றன, மார்பு எவ்வளவு விம்மியிருக்கிறது, இடை எவ்வாறு சிறுத்திருக்கிறது......என்று மனத்தில் அளவிடும் வேலையில் பிரமதேவன் ஈடுபட்டார். தன்னைக் கூர்ந்து பார்த்தபடி தந்தை இருப்பதைப் பார்த்ததும், சரசுவதி நிமிர்ந்து “ஏன், அப்பா!” என்று அருகே வருவாள்.

“அப்பா!” என்ற சொல்லைக் கேட்டுத் தன் கண்களை மூடிக்கொண்டு, யோகத்தில் இருப்பதுபோல் உட்கார்ந்துகொள்வார். கண்ணை மூடினாலும், கருத்தை மூடிக்கொள்ள வழியில்லையே! அந்த முகம், அந்த விழிகள், அந்த இதழ்கள், அந்தத் தளிர்மேனி, அவர் மனதில் நடனமாடும். “கண்ணே!” என்று மயங்கிய நிலையில் கூறுவார்.

“ஏன், அப்பா!” என்று சரசுவதியின் குரல் மறுபடியும் கேட்கும். கண்ணை விழித்துப் பார்த்தால், அந்த சாட்சாத் சரசுவதியே நின்றுகொண்டிருப்பாள். பிரமாவுக்கு ஒன்றும் புரியாது. “போய் அத்திரியைக் கூப்பிட்டு வா! வசிட்டனை வரச்சொல்!” என்று ஏதாவது வேலையிட்டுப் போகச்செய்வார். சரசுவதி போவாள். அவள் போகும்பொழுது, அவள் நடக்கும் அழகைப்பார்த்து ரசித்தவண்ணம் இருப்பார்.

சிறிது நேரத்துக்கெல்லாம், அத்திரி, வசிட்டர் முதலான பிரமபுத்திரர்கள் வந்து கைகட்டி நிற்பார்கள்.

“ஏன் நிற்கிறீர்கள்?” என்று தந்தை கேட்பார்.

பிரம புத்திரர்களுக்கு அந்த கேள்வி ஆச்சரியத்தை அளிக்கும். “நீங்கள்தான் வரச் சொல்லி யிருந்தீர்களாம். உங்கள் கட்டளைகளுக்குக் காத்திருக்கிறோம்.”

“நான் வரச் சொல்லவில்லையே!”

"நீங்கள் வரச்சொல்லவில்லையா? தங்கை வந்து நீங்கள் கூப்பிடுவதாகச் சொன்னாளே!"

பிரமதேவன் இப்பொழுது விழித்துக்கொள்வார். "ஆமாம், மறந்துவிட்டேன்! உங்கள் வேலைகள் சரிவர நடைபெறுகின்றனவா?"

"நடைபெறுகின்றன."

"சரி, நீங்கள் போகலாம்!"

பிரமபுத்திரர்களுக்கு ஒன்றும் புரியாது. இதற்காகவாத் தங்களை அவர் கூப்பிட்டார்? சரசுவதியைப் பார்க்கும்பொழுது அவர்கள் கோபித்துக் கொள்வார்கள்.

"ஏன் இந்த விளையாட்டு? எங்களை அப்பா கூப்பிட்டதாக வரச் செய்தாய்!"

சரசுவதிக்கு ஒன்றும் புரியாது. "அப்பா தான் உங்களைக் கூப்பிட்டு வரச் சொன்னார். இது உண்மை!"

"நாங்கள் எங்கள் வேலைகளை, செபதபங்களை நிறுத்தி, பிதாவின் முன்போய் நின்றதும், அவர் 'ஏன் வந்தீர்கள்!' என்று கேட்கிறார்!"

"அவர்தான் ஒவ்வொருவர் பெயராகச் சொல்லிக் கூப்பிட்டு வரச் சொன்னார்."

பிரம புத்திரர்கள் போய்விடுவார்கள். சரசுவதி தனித்து உட்கார்ந்திருப்பாள். பிரமதேவன் பெருமூச் செறிவார்.

பிரமதேவனின் மனம் வேத தர்மங்களில், சாத்திர சங்கடங்களில் பெரும்பாலும் ஈடுபட்டிருக்காது. அதோ! மண்டியிட்டு உட்கார்ந்து மலர் தொடுத்துக்கொண்டிருக்காளே மகள் சரசுவதி—அவள்பால் ஈடுபட்டிருக்கும். மானசீகமாக அவர் நினைத்துக்கொள்வார். ஓடிப்போய் அவள் கண்களைப்பொத்தினால், அவள் கூந்தலைப்பற்றி யிழுத்து வேடிக்கைசெய்தால், மலரைக் கொய்து அவள் கன்னத்தில் தட்டி, "மலரம்பு பட்டு வேதனைப் படுகிறேன்! வா, மலர் முகமே! மதுவிழியே!" என்று அவளை அருகணைத்து,—தன் மனதில் நினைத்து பிரமதேவன் ஆனந்தப்பட்டுக் கொள்வார்; உலகத்தைச் சிருட்டிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கவேண்டியவர் தம் மனதில் ஒரு புதிய உலகை சிருட்டித்துக்கொண்டிருந்தார். அந்த மனோவேகத்தில், சரசுவதி அவர் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு ஓடுவாள், மகள் தந்தையை அழைத்துக்கொண்டு போவது போல அல்ல. காதலி காதலனைப் பற்றிச் செல்வது போல்; ஆடுவாள், வீணை மீட்டிப் பாடுவாள்: அது கேட்டு பிரமன் அருகே வருவார்; அவள் தப்பிச் செல்வாள், அவர் தொடவருவார்; மலர்ப்பொழிலில் அவள் ஒளிந்துகொள்வாள், மறைந்து சென்று பிரமா அவளைச் சிக்கெனப் பிடித்துக்கொள்வார்.

"ஆகா!" என்று தன்னையுமறியாமல் பிரமா ஆனந்தப்பட்டுக்கொள்வார்.

"அப்பா!" என்று கூப்பிட்டுக்கொண்டு சரசுவதி வருவாள்.

பிரமதேவர் கண்ணைத் திறப்பார், கோபமும், சோகமும் வரும்.

அந்த சரசுவதி "அன்பே! ஆரமுதே!" என்று கொஞ்சினாள், எதிரே நிற்கும் பெண் "அப்பா!" என்று கூவுகிறாள்.

தன் கழுத்தில் கையை வளைத்து, அவள் முயங்கினாள். இவள் தன் பாதங்களில் கையை வைத்து வணங்குகிறாள்.

மலரை எடுத்து தன் மார்பில் அவள் வீசிச் சிரித்தாள், தண்ணீரை எடுத்து முகத்தில் வீசினாள்; இவள் தண்ணீரைக் காலில்விட்டு, மலர்களைத் தூவுகிறாள்.

அவள் மனைவியாக—தன் மனதுக்கிசைந்த மங்கையாக இருந்தாள். இவளோ மகள் என்ற நினைவுடன் இருக்கிறாள்.

பிரமதேவன் மனப்பிரமையுடன் இருந்தார். தந்தையின் போக்கு மானசபுத்திரர்களுக்குப் புரியவில்லை. பிதாவின் பலம் அவர்களுக்குத் தெரியும். மிகச்சிக்கல் நிறைந்த பொருள்களை விளக்கிடும் வேதங்களையும் சாத்திரங்களையும் அவர் செய்தவர். அப்படிப்பட்ட அபார ஞானஸ்தருக்கு—எல்லா உலகங்களிலும் கிடைக்கவேண்டிய அறிவு முழுவதும் அவரிடமிருந்துதான் வந்தவையாகும். அப்படிப்பட்ட கடவுளுக்கு மனத்தில் சஞ்சலத்தைத் தரும் வகையில் என்ன சிக்கல் வந்ததென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அத்துடன் தங்களை அழைத்துவிட்டு, எதிரில் போனதும் முற்றும் மறந்த நிலையில், "ஏன் வந்தீர்கள்?" என்று கேட்பதும் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. கடைசியாக "வேலையைக் குறைவில்லாமல் செய்யுங்கள்!" என்று தங்களுக்கு அவர் கட்டளையிட்டபோதிலும், அவர் செய்யும் வேலையில் வரவரக் குறைபாடுகள் காணப்பட்டன. இதை அவர்கள் சொல்லிக்கொள்ளாவிட்டாலும், உணர்ந்தார்கள்.

பிரமாவின் சிருட்டி வேலை திருப்திகரமாக நடைபெறவில்லை. பலசமயம் சிருட்டிவேலையில் ஈடுபடாமல் பிரமா பேசாமல் முகச்

சோர்வுடன் உட்கார்ந்திருப்பதை அவர்கள் பார்த்தார்கள், மேலும் தங்களைப் பார்த்தால், கோபத்துடன் ஏதாவது சொல்லி அனுப்பி விடுவதை மானச புத்திரர்கள் கண்டார்கள். அதே சமயத்தில் சரசுவதி என்றால் அவளுக்கு மட்டும் தனிச்சலுகை தந்து இருக்கச் சொல்வதும் அவர்களுக்குப் புரியவில்லை. தாங்கள் என்ன தவறு செய்துவிட்டோமென்று பிரமபுத்திரர்கள் கலங்கினார்கள்.

பிரமாவின் மனதில் மூண்ட களங்கம் மறைவதாயில்லை, வளர்ந்தது, மகள் சரசுவதியைப் பார்க்காத நேரம் அவருக்குப் பாழும் நேரமாக இருந்தது. மற்ற புத்திரர்கள் எதிரே நிற்பதைக்கூடக் கவனிக்காமல், மகளை மட்டும்—ஏற இறங்க அழகுபார்த்துக்கொண்டிருப்பார். மகளைக் கூப்பிடுவதும், பார்ப்பதும், பேசுவதும், சிரிப்பதும் மற்றவர்களுக்கு வேடிக்கையாக இருந்தன. சரசுவதிக்கும் தந்தையின் போக்கு புரியவில்லை. கண்ணைத் திறந்து வெறிக்கப் பார்ப்பதும், பெருமூச்சுடன் "கண்ணே!" என்று கூப்பிடுவதும், அவளுக்குப் புதிதாக இருந்தன. சிலசமயங்களில் அவர் வேடிக்கையாக ஏதாவது சொல்வார், கன்னத்தைத் தட்டி "உன்னைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டும்" என்று சிரிப்பார்; ஏதோ அப்பா வேடிக்கை காட்டுகிறார் என்று மகள் போய்விடுவாள். அந்த வேடிக்கைகளில் இருந்த விபரீதத்தை அவள் உணரவில்லை. தன்னைப் பார்க்கும்பொழுது, அவர் சிரிப்பதை ஏதோ அர்த்தமில்லாமல் சிரிக்கிறார் என்று அவள் நினைத்தாள். அந்த அர்த்தமற்ற சிரிப்புக்குப் பிரமன் தந்த அர்த்தம் அவளுக்குத் தெரியாது.

காலையில் எழுந்ததும், பிரமபுத்திரர்கள் நீராடி, செபதபங்களை முடித்து, தங்கள் பிதாவை மும்முறை வலம்வந்து, வணங்கிச் செல்வார்கள். அவர்களுடன் சரசுவதியும் வருவாள். அன்று காலை என்றுமில்லாத அழகுடன், புதுப்பொலிவுடன் சரசுவதி காணப்பட்டாள், பிரமாவின் கண்களுக்கு, அவருடைய மனதில் வெறிகொண்டது. மகளைப் பார்த்தவண்ணம் தந்தை உட்கார்ந்திருந்தார். அவள் நடமாடும் பக்கம் அவர் கண்களும் தொடர்ந்து சென்றன, பார்வை அவளைத் தழுவியவண்ணம் இருந்தது. நின்றுகொண்டிருந்த பிரமபுத்திரர்களுக்கு தந்தையின் பார்வை பிடிக்கவில்லை, அவர்கள் ஒவ்வொருவராக வலம்வந்து வணங்கி நின்றார்கள், பிரமன் அவர்களைப் பார்க்காமலே—அவர் பார்வை நீக்கமுடியாதபடி சரசுவதியின் மீது படிந்திருந்தது—ஆசீர்வாதம் செய்தார். கடைசியாக சரசுவதி அருகே வந்தாள், முழந்தாளிட்டு வணங்கினாள், அவருடைய பார்வை அள்ளி விழுங்கிவிடுவதுபோலிருந்தது, பார்வையில் ஒருவித பரவசம், வெறி! "என்ன அழகு! என்ன ரூபம்!" என்று பிரமதேவர் முனகிக்கொண்டது மானச புத்திரர்களுக்கு—அருகில் நின்றவர்களுக்குக் கேட்டது.

மகளைப் பார்த்துத் தந்தை அடையும் வியப்பா அது?

பார்வையில் வியப்பு இல்லை, வெறி—அப்படியே எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற வெறி இருந்தது.

மகள் எழுந்து வலம் வந்தாள். எதிரில் நின்ற மகள்—மகளல்ல, அழகு மங்கை, பின்பக்கமாக வரும்பொழுது பிரமனுக்கு எல்லாம் இருண்டுவிட்டதுபோலிருந்தது. அவள் தன்னைச் சுற்றிப் பின்புறமாக வரும் ஓரிரு விநாடிகள்கூட அவரால் பொறுக்கமுடியவில்லை. எப்பொழுதும் பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டுமென்று அவர் துடிதுடித்தார். அவள் வலம் வரும்பொழுது, நகர்ந்து உட்கார்ந்தபடித் திரும்பிப் பார்த்துவிடலாம் போலிருந்தது. அவளைப் பார்க்காத ஒவ்வொருவிநாடியும் ஒவ்வொரு யுகமாக பிரளய காலமாக அவருக்கு இருந்தது. திரும்பிப் பார்க்கலாமென்றாலோ, மானச புத்திரர்கள் பத்துப்பேரும் தன்னைப் பார்த்தபடி நின்றுகொண்டிருக்கிறார்கள்.

திரும்பிப் பார்த்தால் அவர்கள் சந்தேகங்கொள்வார்கள், ஆனால் பார்க்காமலிருக்கவும் முடியவில்லை. திரும்பிப் பார்க்கக்கூடாது, அதே சமயத்தில் வலம்வரும் அழகியைப் பார்த்தபடி இருக்கவேண்டும், அவளைப் பார்ப்பது கண்ணுக்குக் குதூகலம், கருத்துக்கு வெறியடங்காத ஆவல்! ஆக பிரமன் ஒரு உபாயம் செய்தார்.

சரசுவதி வலம் வரும்பொழுது, பிரமதேவனின்முன்னின்று வலதுபக்கம் வந்தாள், பிரமதேவனின் வலது பக்கத்தில் ஒரு தலை உண்டானது; பின்பக்கம் சென்றாள்; பின்பக்கம் பார்க்க பிரமதேவனுக்கு ஒரு தலை உண்டானது. இடதுபக்கம் சரசுவதி வந்ததும், அங்கும் ஒரு தலை உண்டாகியிருக்கக் கண்டாள். நான்கு திக்கிலும் நான்கு தலைகள்! சுற்றி வரும் உருவத்தை இடைவிடாமல் பார்த்துக்கொண்டிருக்க முடிந்தது! முன்பு இரண்டு

சிறுகதை

தினகரன்

'ஓ' என்ற பேரிரைச்சலுடன் பங்களூர் பாசஞ்சர் ஜோலார்பேட்டை பிளாட்பாரத்தை விட்டு நகர்ந்தது. பெரிய சந்தைக் கடையிலிருந்து திடீரென்று அமைதியான இடத்திற்கு வந்ததைப் போன்றிருந்தது. ரயில் ஓட ஆரம்பித்ததும் சில்லென்று குளிர்ந்தகாற்றுப் பட்டது. இதுவரை புழுக்கமாக இருந்தது சற்று அடங்கியது. செய்தித்தாளைப் படித்துக் கொண்டிருந்த நான், அதை மடித்துக் கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தேன். நான் இருந்த மூன்றாம் வகுப்பு வண்டியில், பகல் நேரமாதலால், கூட்டம் அதிகமில்லை. என்னைத் தவிர ஐந்தாறுபேர்கள்தான் இருந்தார்கள். கதவின் ஓரத்தில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். என் தலையை வெளியே நீட்டிப் பார்த்த பொழுது அந்த மனிதரை எங்கோ பார்த்தது போலிருந்தது. சட்டென்று புரியவில்லை. மறுபடியும் அவரை உற்றுக் கவனித்தேன். சிறிது நேரம் யோசித்தபிறகு அவர் தினகரன் என்பது நினைவிற்கு வந்தது. அதைத் தொடர்ந்து பத்து ஆண்டுகளாக அவரைப் பற்றி உலவி வரும் வதந்திகளும் நினைவிற்கு வந்தன.

தினகரன் பட்டிணத்தில் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நாங்கள் வசித்த தெருவில் வசித்து வந்தார். அப்பொழுது அவர் "உலகம்" என்னும் பத்திரிகையில் கதைகள் கட்டுரைகள் எழுதிவந்தார். ஒரு பாங்கியில் வேலை பார்த்துவந்தார். அதன்றி அவருக்கு ஓரளவு சொத்தும் வீடும் இருந்தது. ஒருநாள் திடீரென்று அவர் எங்கோ சென்று விட்டதாகத் தெரிந்தது. சில நாட்களுக்குப் பிறகு 'அவர் தனது வீட்டையும் நிலத்தையும் விற்றுவிட்டார்' என்று சொன்னார்கள். அவர் எங்கேசென்றார்? என்ன செய்கிறார்? என்பது யாருக்கும் தெரியவில்லை. ஆனால் அவரைப் பற்றி ஊரில் பலவிதமாகச் சொன்னார்கள்.

அவர் மலேயா சென்று அங்கே எஸ்டேட்டுகள் வாங்கி அங்கேயே தங்கிவிட்டதாக ஒருவர் சொன்னார்.

"அதெல்லாம் தவறு. அவர் பணக்காரர்தான், அதனால் அவர் அங்கே போய் அதை வாங்கினார், இங்கேபோய் இதை வாங்கினார், என்று சொல்லுவது தவறு. அவர் தெற்கே எங்கோ தன் சொந்தக்கிராமத்திற்குச் சென்று கிராமப்புனருத்தாரண சேவையில் இருப்பதாகக் கேள்வி" என்றார், அவரோடு வேலை செய்த பாங்கர் பராங்குசம்.

"ஷேர் மார்க்கட்டில் அவர் பெரிய பேர்வழி சார். அவரைக் கம்பீட்பண்ண எவராலும் முடியாது. அவர் இப்பொழுது பம்பாயில் பெரிய ஆளாக இருக்கிறார்" என்று எதிர் வீட்டு எல்லப்பன் கூறினார்.

"அவர் வடக்கே ஆசிரமத்தில் சேவை செய்வதாக ஒரு சாமியார்மூலம் நான் அறிந்தேன்" என்று உப்பு மண்டி குப்புசாமி சொன்னார்.

இவற்றில் யார் சொல்லுவது உண்மையென்று விளங்காமலிருந்தது. இது போன்று

கண்கள் மகளின் அழகைப்—பூரிப்பைப் பருகியதுபோய், இப்பொழுது எட்டுக் கண்கள் போட்டியிட்டுக்கொண்டு பருகின.

சரசுவதி ஆச்சரியத்துடன் பார்த்தாள். வெறிகொண்ட கண்கள் அவளை அழைத்தன. எந்தப்பக்கம் ஒதுங்கி நின்றாலும், கண்கள் விடுத்திடும் காமப் பார்வையை மகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

தந்தையின் விகாரப் பார்வையிலிருந்து தப்ப, சரசுவதி தன் சகோதரர்களுடன் சேர்ந்து ஆகாயத்தில் எழுந்து சென்றாள். எல்லாம்வல்ல பிரமதேவர், மேல்நோக்கிப் பார்க்க ஐந்தாவதாக ஒரு தலையையும் உண்டாக்கிக்கொண்டார்.

(தொடரும்)

தினகரனைப் பற்றிய பல வதந்திகள் இந்த பத்து வருடங்களாக உலவிக்கொண்டிருந்தன. அப்படியிருக்க நான் திடீரென்று அவரை ரயிலில் சந்தித்தது ஆச்சர்யமாக இருந்தது.

ரயில் இரண்டு ஸ்டேஷனை தாண்டிவிட்டது இதுவரை கதவருகில் நின்றிருந்தவர் என் எதிரே வந்து உட்கார்ந்தார். நான் அவரை உற்றுக் கவனித்தேன். எதையும் ஆழ்ந்து நோக்கும் கண்கள், சிகப்பான நிறம், மீசை வெளுத்திருந்தது. முகத்தில் கவலையின் ரேகைகள் படர்ந்திருந்தன. நான் உற்று நோக்குவதைக் கவனித்துவிட்டு என்னைப் பார்த்தார். அவர் என்னை அடையாளம் கண்டுகொண்டார். என்னையும் என் குடும்பத்தாரையும் விசாரித்தார். அவரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எனக்கு ஆவலாக இருந்தது.

"நீங்கள் இப்பொழுது சென்னையில்தான் இருக்கிறீர்களா" என்றேன். ஊம்......என்றார். பின் சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு, "நான் ஒரு புத்தகத்தில் படித்தேன் வயோதிகப்பருவத்தில் அன்புகொள்ளல் உணவுக்குச் சமம் என்று. ஆனால் நான் சாரு! சாரு!...... ஆம்! நிலத்திலும் நீரிலும் வாழும் பிராணிகள் கூட ஒன்றை ஒன்று நேசிக்கின்றன. ஆனால் நாம் மட்டும்"......என்று கூறி ஆகாயத்தை வெறித்து நோக்கினார். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஏன் அப்படிக் கூறுகிறீர்கள் என்றேன். ஆம் தம்பி இதுஉண்மை. என் அனுபவத்திலிருந்து கூறுகிறேன் கேள்! அமைதிதேட என்று என்னிடமிருந்த பொன்னையும் பொருளையும் அறியாமையால் அழித்த வரலாற்றை உனக்குக் கூறுகிறேன்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு 'உலகம்' பத்திரிக்கையில் எழுத்தாளனாக இருந்தேன். அத்துடன் பாங்கு ஒன்றில் வேலை பார்த்தேன். என் குடும்பத்தில் நான் தவிர வேறு ஒருவருமில்லை. என் தந்தை வைத்த நிலமும் வீடும் எனக்கிருந்தது. இதனால் தற்கால மனித சமுதாயம் விரும்பும் பொருளும் புகழும் எனக்குக் கிட்டியது. என் வாழ்வில் எனக்கொரு இலட்சியம் வேண்டும், வாழ்வில் எது உயர்ந்த நிலை? எது உயர்ந்த பண்பாடு? எது சிறப்பான வாழ்க்கை? என்று என்னை நானே கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில், நான் ஒரு சாமியாரை—உபன்யாசம் செய்பவனைக் கண்டேன் அவனது பெயர்; சிவஞானமென்பது. அவனுடைய உபன்யாசங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவன் கூறுவதெல்லாம் எனக்கு உண்மையெனப்பட்டது. நானும் அவனும் மிகவும் நெருங்கிய நண்பர்களானோம். அவனிடம் நான் நாள் தவறாமல் மதத்தைப்பற்றிய பலவற்றைக் கற்று வந்தேன். அதற்காக வடமொழி பயின்றேன். புராண இதிகாசங்களையும், வேத வேதாந்தங்களையும் கற்றுத் தெளிந்தேன். வடமொழி, தமிழ் தவிர பிற மொழிகளில் போற்றப்பட்ட மதக் கோட்பாடுகளையும் கண்டறிந்தேன். இவையெல்லாம் படித்ததும் மதத்தினிடம் எனக்கிருந்த பற்று வெறியாகவே மாறிவிட்டது. என்னுடனிருந்த சாமியாருக்குக் கண்ணை மூடிக்கொண்டு செலவழித்தேன்.

ஒருநாள் அந்த சாமியார் என்னிடம் காசியில் ஒரு பெரிய மடம் இருப்பதாகவும், அங்கு ஒரு மதகுரு—பெரிய மகான்—இருப்பதாகவும் நாம் இருவரும் அங்கு சென்று அவருடைய போதனைகளைக் கேட்டுக்கொண்டு அங்கேயே இருந்து காலம் கழித்துவிடலாம், அது புண்ணிய பூமி என்றும் கூறினான். அதன்பேரில் என்னிடம் ரொக்கமாக இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினோம். பாதி வழியில் அந்த சாமியார் என்னைக் கைவிட்டுவிட்டான். என் பணத்தில் ஒரு பகுதி அவனிடமிருந்தது. நான் அப்பொழுது அவனுடைய கபடத்தை அறியவில்லை. அவன் ஏதாவதொரு ஸ்தலத்தைப் பார்த்துவிட்டு, பக்தி மேலீட்டால் சென்றிருப்பான் எப்படியும் காசி வந்து சேருவான் என்று நினைத்தேன்.

நான் மட்டும் காசி சென்று அங்கிருந்த மடத்தை அடைந்து அந்த மகானைக் கண்டேன். அப்பொழுது அவர் பிரான்சிலிருந்து இந்து மதபோதனைபெற வந்திருந்த இளம் மாது ஒருவருக்கு மதபோதனை செய்வதில் முனைந்திருந்தார். அதைக்கண்டு அவரிடம் எனக்கிருந்த மதிப்பு இன்னும் அதிகமாயிற்று. விஞ்ஞான ரீதியாக மதத்தை ஆராயப்புகுந்தால் ஒன்றும் மிஞ்சாது. அது தவறு. விஞ்ஞான உலகில் தவிர அது வேறு உலகில் பயன்படாது. மதத்தைப் பற்றியும் வேதோபநிஷத்துக்களைப் பற்றியும் அறியவேண்டுமானால் இகத்தின் இன்பம் என்னும் மாயையில் சிக்காது பரம் பற்றிய ஆராய்ச்சியில், அந்தப் பேரின்பத்தில் இறங்கி, முன்னோர்கள் வழிப்படி நடக்கவேண்டும். எளிமையான வாழ்வு, உண்மையான உள்ளம் இவற்றுடன் இருப்பதுதான் சிறந்த வாழ்வு என்று கூறினார்.

மத மாயையில் மூழ்கிக்கிடந்த நான் "எளிமை, இரக்கம், உண்மையைக் காணும் பண்பு" இதைப் போதித்த அந்த குரு அணிந்திருந்த பட்டுப் பீதாம்பரத்தையும், வைரம்

[redacted]

பதித்த உத்திராட்சத்தையும், பாலருந்திய தங்கக் கிண்ணத்தையும் கவனிக்கவில்லை. பிறரை எத்தி வாழ்ந்துவரும் அவருடைய தேகத்தின் பளபளப்பை நான் அவருக்கு பக்தி மிகுதியால் பரமனின் அருளால் கிடைத்த ஜோதி என்று எண்ணி ஏமாந்தேன்.

எனக்கிருந்த வீடு, நிலம், இவற்றை அந்த மடத்தின் பெயருக்கு எழுதிவைத்தேன். இரக்கத்தின் மொத்த வியாபாரி நான்தான் என் மூலம்தான் இரக்கம் செயல்படவேண்டும் என்று போதனை செய்துகொண்டு ஊரில் என்போன்றவர்களின் பணத்தை தம் மடத்தின் பெயருக்கு எழுதி வாங்கிக்கொண்டிருந்தார் அவர்.

வெளிநாடுகளில் தேய்ந்து உருக்குலைந்து வரும் இந்து மதத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டு என்னை அனுப்பிவைத்தார். பல இடங்களிலும் இந்துமத பிரசாரம் செய்துவிட்டு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மலேயாவிலிருந்து நான் தாய்நாட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தேன்.

அன்று நான் வந்த கப்பலில் ஒரு பெண்ணைச் சந்தித்தேன். அந்த நாள் என் வாழ்க்கைப் பாதையில் ஒரு முக்கியமான திருப்பமாகும். ஆம்! அந்தப் பெண்ணின் பெயர்தான் சாரு! மிகவும் எளிமையான தோற்றத்தோடு காணப்பட்ட அவள் கவர்ச்சிகரமாக இருந்தாள். துன்பத்தின் நிழல் அவள் முகத்தில் படிந்திருந்தது. அவளிடம் எனக்கு இரக்கம் ஏற்பட்டது. அவள் தந்தை பட்டாளத்தில் வேலைசெய்துகொண்டிருந்தவராம். பாவம்! இறந்துவிட்டார். அவளுக்குத் துணை வேறு ஒருவரும் இல்லை. அனாதையான அவள் தனியாகத் தாய்நாட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தாள். அவளிடம் பேச்சுக்கொடுத்து இவற்றைத் தெரிந்துகொண்டேன்.

அன்று இரவு. நிலவு காய்ந்துகொண்டிருந்தது. எல்லோரும் நல்ல உறக்கத்திலிருந்தார்கள். எனக்குத் தூக்கம் வராததால் நான் எழுந்து மேல்தளத்திற்குச் சென்றேன். தளத்தின் ஒரு ஓரத்தில் அவள் நிற்கக் கண்டேன். கடலை உற்று நோக்கிக்கொண்டு அவள் நின்றிருந்தாள், துன்பம் தாளாமல் ஒருவேளை தற்கொலை செய்துகொள்ள நிற்கிறாளோ என்று எண்ணினேன். திக்கென்றது. அவள் அருகே சென்று பேச்சுக்கொடுத்தேன். பிறந்த பொன்னாட்டில், பெற்றவர்களைப் பறிகொடுத்துவிட்டு அனாதையாகத் தாய்நாட்டிற்குள் நுழைகிறோம் என்ற வருத்தத்தால் அவள் அழுதுகொண்டு நின்றிருந்தாள். "அனாதை என்று எவருமே கிடையாது எல்லோரும் கடவுளுடைய மக்கள், படைத்தவன் காப்பான், ஆதலால் உள்ளம் தளர்தல் கூடாது. அவனிடம் பக்திகொண்டு அவன் பாதங்களை வணங்குதலே மனதிற்கு அமைதி தரும்" என்று அவளுக்கு ஆறுதல் கூறினேன். பிறகு எங்கள் மடத்தைப்பற்றியும் அதன் கோட்பாடுகளையும் கூறி அவள் விரும்பினால் அதில் சேவை செய்யலாம் என்றும் அவள்போன்று பலர் அங்கிருப்பதாகவும் கூறினேன். அதற்கவள் இசைந்தாள். அதன்படி அவளை என்னுடன் அழைத்துச்சென்று மடத்தில் சேர்த்தேன். மதகுருவும் அவளைச் சேர்த்துக்கொண்டார். அந்த மடத்தில் உள்ள பல வேலைகளையும் அங்குள்ளவர்கள் பகிர்ந்து செய்வது வழக்கம். மதகுருவுக்குப் பணிவிடை செய்ய, ஒரு நாளைக்கு ஒருவர் என்று முறைப்படி நடந்துவந்தது. வந்த புதிதில் சாரு உற்சாகத்துடனிருந்தாள். சிறிது நாட்களுக்கெல்லாம் அது மறைந்துவிட்டது. அவள் மௌனமாக வெகுநேரம் உட்கார்ந்திருப்பாள். பரமனைப்பற்றிய தியானத்தில் ஆழ்ந்திருப்பதாக நான் நினைத்துக்கொண்டேன. அடிக்கடி அவளைச் சந்தித்து 'மடத்துக்கு சேவைசெய்து மதகுரு சொல்படி நடப்பதுதான் மன் அமைதிபெறும் வழி, அதுதான் சிறந்த நிலை, இந்த உலகத்தின் இன்பம் மாயை' என்று அவளுக்கு உபதேசித்துவந்தேன். நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அவள் முகத்திலிருக்கும் சோகம் மறைந்துவிடும். அவள் ஏதோ சொல்ல வாயெடுப்பாள். ஆனால் நிறுத்திக்கொள்வாள். ஏதாவது சந்தேகமிருந்தால் கேட்கும்படி கூறியும் அவள் கூறமாட்டாள். மறுபடி மறுநாள் பார்க்கும்பொழுது அவள் முகத்தில் சோகம் கப்பி நிற்கும். என் மனதும் இதனால் கலக்கமுறும். ஒருநாள் அவள் மிகவும் வாட்டமாகக் காணப்பட்டாள். அன்று அவளிடம் வழக்கப்படி என் போதனையை ஆரம்பித்தேன். பேச்சின் முடிவில் மறுநாள் குருவுக்குப் பணிவிடை செய்யும் வேலை அவளுடையதென்றும் பயமாக இருப்பதாகவும் தெரிவித்தாள். பக்தர்களுக்கு பணிவிடை செய்வது சிறந்த சேவை, அதிலும் மதகுரு, மகானுக்கு செய்வது நாம்பெற்ற பேறு. அவர் மிகவும் நல்லவர் நமக்கெல்லாம் ஞானக்கண்ணை அளித்த மகான் அவரோடு பூசை செய்வதில் உதவி செய்வதற்கு நாம் கொடுத்து வைத்திருக்கவேண்டுமென்று கூறினேன். அவள் பேசாமலிருந்தாள்.

மறுநாள் நான் கங்கையில் குளித்துவிட்டு பஜனையில் கலந்துகொண்டு கோவிலுக்குச் சென்றுவிட்டு மடத்திற்கு வந்தேன். அந்த வருடம் நடத்தவேண்டியவிழாவைப்பற்றி குருவிடம் கலந்து பேசவேண்டியிருந்தது. பூசை முடிந்ததும் தியானத்தில் ஆழ்ந்துவிடுவார். ஆதலால் விரைவாக அவரைக் காணச்சென்றேன், அவருடன் எப்பொழுதும் இருக்கும் ஒரு இளம் சாமியார் வாயிற்படியில் உட்கார்ந்து தூங்கிக்கொண்டிருந்தான் அவனைத் தட்டிக் கேட்டதற்கு தூக்கத்தோடு அவர் பூசைசெய்துகொண்டிருப்பதாகத் தெரிவித்தான். உடனே நான் உள்ளே சென்றேன். சென்றதும் நான் கண்ட காட்சி என்னைத் திடுக்கிடவைத்தது. மதகுரு என்று நான் போற்றிய அந்த மகாபாவி சாருவின் கைகளைப் பிடித்துக்கொண்டு அவளைத் தன் காம வெறிக்கு இணங்கும்படி துன்புறுத்திக்கொண்டிருந்தான். அவனுடைய பிடியில் சிக்கி அவள் தவித்துக்கொண்டிருந்தாள். இதைக் கண்டதும் ஆயிரம் தேள் கொட்டியதுபோலிருந்தது எனக்கு. என் நரம்புகள் துடித்தன. எனக்கிருந்த ஆத்திரத்தில் பேசமுடியவில்லை அவனைக் கொலைசெய்துவிடவேண்டுமென நினைத்தேன். அவனை நெருங்கினேன், அவன் தன் அந்தஸ்து முழுவதையும் உபயோகித்து எங்களை அழித்துவிடுவதாக பயமுறுத்தினான். அதற்காக பயபபடாமல் நான் அவன்மீது பாய்ந்தபொழுது சாரு வந்து என் கைகளைப் பிடித்துக்கொண்டாள். என் உடல் முழுவதும் மின்சார ஓட்டம் ஏற்பட்டது. அவளுடைய கண்கள் எனக்கு வாழ்வு தா என்று கெஞ்சின. அவளைக் கப்பலில் சந்தித்து நம்பிக்கை ஊட்டியது நினைவுவந்தது. என் உள்ளத்தில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது. இவனை ஒழிப்பதால் பயனில்லை இந்த மடத்தையே ஒழித்துக்கட்ட வேண்டும். இதை உலகுக்குக் காட்டவேண்டுமென்று நினைத்து, நான் சாருவின் கையைப் பிடித்து பாபரவென்று இழுத்துக்கொண்டு மடத்தைவிட்டு வெளியேறினேன். ஏற்கனவே மெலிந்திருந்த அவளுக்கு அன்று ஏற்பட்ட அதிர்ச்சியினால் காய்ச்சல் வந்துவிட்டது. நான் அவளை மணந்துகொள்வதாக வாக்களித்தேன். அதைக்கேட்டு அவள் மகிழ்ச்சியடைந்தாள். அவள் உடல் நலமடைந்ததும் நாங்கள் இருவரும் இல்லறம் நடத்துவதாக இருந்தோம். ஆனால் அவள் தேறவில்லை. தேய்ந்துகொண்டே வந்தாள். ஒருவாரம்கழித்து ஒரு நாள் இரவு அவள் என்னைவிட்டுப் பிரிந்து விட்டாள். என் மனதும் அதோடு பேதலித்து விட்டது. மடத்தை ஒழித்துக்கட்டவேண்டுமென்பதற்கு நான் கூறியவற்றை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. என்னைப் பைத்தியக்காரனென்று ஏசினர். அதன்பிறகு நான் சென்னை வந்தேன். ஒருநாள் செய்தித்தாளில் சிவஞான சாமியார் என்பவர், சூதாடும் இடத்தில் குடிமயக்கத்திலிருந்து பிடிபட்டார் என்று இருந்தது. அதைக்கண்டதும் எனக்கு உலகத்திலிருந்த நம்பிக்கையே போய்விட்டது. நான் சாருவை அநியாயமாகக் கொன்றுவிட்டேன். எப்பொழுதும் என் நினைவில் அவள் இருக்கிறாள்.

ஒவ்வொரு இரவும் நான் அவளைச் சந்திக்கிறேன். அவள் எனக்காக அறையில் காத்திருப்பாள். தம்பி! அதோ அந்த ஹோட்டல் மாடி மூன்றும் எண் அறை விளக்கு எறிகிறது பார் காத்திருப்பாள் வருகிறேன் என்றார். அவர் போய்க்கொண்டே இருந்தார். இப்பொழுது சிறிது இருட்டிவிட்டது. எங்கும் விளக்குகள் எரிந்தன, நான் என் வீட்டிற்கு நடந்தேன். மறுநாள் காலை தினத்தாளில் "உலகம்" பத்திரிக்கை எழுத்தாளர் தினகரன் நேற்றிரவு திடீரென்று மரணமடைந்தார் என்ற செய்தி வெளியாகி இருந்தது.



வள்ளுவர் வாய்மொழி

[மே. சி. சிதம்பரனார்]

வள்ளுவர், உலக முதன்மக்களாகத் தோன்றிய பழந்தமிழர் குடியிற் பிறந்தவர். தமிழ்ப் பண்பாட்டுடன் வளர்ந்தவர். இயற்கை செயற்கையின் இயல்புகளை அறிந்தவர். செய்வனவும் தவிர்வனவும் புரிந்தவர். வாழ்க்கையின் அனுபவம் தெரிந்தவர்.

உலகமக்கள், அனைவரும் பொது ஆசிரியன் எனவும், பொதுமறை எனவும், ஏற்றுக்கொள்ளுமுறையில், தமிழர்மறையாய்த், தமிழரது இலக்கியமாய்த், திருக்குறள் தீட்டித்தந்து "வான்புகழ்கொண்ட தமிழ்நாடு" ஆக்கியவர் வள்ளுவராவார்.

மொழிபெயர்ப்புகள்

திரு சி. ச்செ. பெஸ்கி இலத்தீனிலும், திரு டாக்டர் கிரால் செர்மனியிலும், திரு இ. எரியல் பிரஞ்சிலும், திரு இ. டபிள்யு. எல்லிச் ஆங்கிலத்திலும் திரு வைத்தியநாத நாதா தெலுங்கிலும், திரு அப்பா தீட்சிதர், வடமொழியிலும், திரு சேமானந்தராகத் இந்தியிலும், திரு நீதிபதி கோவிந்தபிள்ளை மலையாளத்திலும் இவ்வாறு சுமார் 23 மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்த்துள்ளனர். உருசியா மொழிபெயர்த்துவருகிறதாம். இவ்வாறு உலக மக்கள் ஆர்வம்கொள்ளக் காரணம் என்ன?

எடுத்துக்காட்டாக இன்னு செய்தாரை 'அதம்' அதாவது ஒறுத்தொழிப்பதே ஒரு கருமவீரனின் கடமை என்கிறது பகவத்கீதை. சீனத்தில் கன்பூசியச் என்ற அறிஞர் நன்மை செய்தார்க்கு நன்மையாற் பதிலிருக்க, தீமை செய்தார்க்குத் தண்டனையாற் பதிலிறுக்க என்றார். ஏன்? நன்மை செய்தார்க்கு நன்மை செய்தால் பிறரையும் நன்மைசெய்ய ஊக்கும். தீமைசெய்தாரை ஒறுத்தல், பிறரையும் தீமை செய்யாதவாறு எச்சரிக்கும், எனக் காரணமும் கூறுகிறார்.

ஏசுநாதர், "தீமையை எதிர்க்காதே. ஒருவன் உமது இடது கன்னத்திலறைந்தால், அவனுக்கு உமது வலது கன்னத்தையும் திருப்பிக்காட்டு" என்கிறார்.

வள்ளுவர் கூற்றைப் பாருங்கள்!

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

தீமை செய்தார்மீது, ஒறுத்தலைத் தூண்டுவது இயல்புதான். ஆனால், தீயைத் தீயால் அவிக்கமுடியுமா? தண்ணீரன்றோ தேவைப்படுகிறது, ஆதலால் தீமை செய்தார் நாண, அவர்கட்கு நன்மையைச் செய்துவிடு, என்கிறார். மேலும்,

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

தீமை செய்தார்க்கும் நன்மையையே செய்யாவிடத்து உனது சான்றாண்மை எங்கே? இருக்குமாயின் அது கொடுத்த பெருமை தான் என்ன? என்ற கேள்வியும், தூண்டலும், நோதலும், தோன்றுமாறில்லையா? என்னே சொல்வளம், என்னே பொருள்வளம்?

இத்தகைய கருத்துக்களுடன் காலம் ஓடஓடக் கருத்துக்களும் ஆழம் ஆழமாக ஓடி அறிவின் கருவூலமாய்; அறத்தின் பிறப்பிடமாய், அன்பின் அமளியாய், உயிரின் உள்ளமாய், உள்ளத்தின் உணர்வாய், உணர்ச்சியின் ஊற்றமாய், ஊற்றத்தின் ஒழுக்கமாய், வழியும் திருக்குறள் தீட்டிய உலகப்பெரியாரன்றோ வள்ளுவர்?

இல்லற வாழ்க்கையில் ஈடுபடும் ஒவ்வொருவரும் தாங்கள் பணியாற்ற எடுத்துக்கொள்ளும் அறநெறிப் பகுதிகளில் முதன்மையானது முன்னோர் நினைவுநாட்களேயாகும், என்பது குறிக்கவே ஆசிரியர் 'தென்புலத்தார்' என, முதற்கண் குறிப்பிடுகின்றனர்.

தென்புலத்தார், என்பதுபற்றிப் பரிமேலழகர் உரைமாறுபட்டங்கள் பல கொள்கை மாறுபட்டங்கள் சமுதாயத்துட் புகுந்துகிடப்பதால், ஆசிரியர் உண்மைக் கருத்தென்ன? அவரது அகச்சான்றுகள் என்ன? என்பதுபற்றி ஒருவாறு அறியவேண்டுவது இன்றியமையாதது. முதலாவதாகப் பரிமேலழகர் திருக்குறட்குரையெழுத முன்வந்ததேன் என்பதையும் உணர வேண்டும்.

பரிமேலழகர் உரை

கி. மு. 3000 ஆண்டுகளின்போது வட மேற்கு இடைவெளி வாயிலாக நாடுபுக்க ஆரியரை வரவேற்றுதவினர். அவர்கள், தங்கள் கொள்கைகளே மேலானதென்றும், ஓலைச் சுவடிகளைக் காட்டி, இதன்படி நடந்தால், இந்திரனுலகலாம் சந்திரனுலகலாம் மோட்ச உலக செய்தலாம் என, வடநாட்டு மக்களை ஏமாற்றி மீளா அடிமைகொண்டனர்.

வடநாட்டில் இக்கொள்கையைக் கண்டித்து மக்கட்குப் பகுத்தறிவுக் கொள்கையே மேலான தென விளக்கி அறிவுப் பணியாற்ற முன்வந்தவர் புத்தர். அவரது நூல் திரிபீடகம். புத்தர் தமது சீடர்கட்கு கூறிய அருள் மொழிகள் சில :

1. "நமது இறுதி முடிவுகளையும், தத்துவங்களையும், அவற்றின் நோக்கங்களையும் பற்றி விசாரிப்பது மதியீனம்.

2. "நாம் நடத்தவேண்டிய அறவொழுக்கமே முழுக்க கவனத்துக்குரியது.

3. "முதலாவதாக ஆசையை ஒழித்தால் துன்ப எல்லையைக் கடந்தவர்களாவோம்.

4. "அகிம்சையே அறத்தின் உறுப்பு. அருள்தோன்ற வழி.

5. "அருள்சார்ந்த தவ ஒழுக்கமே வீடுபேறு.

6. "அறநெறியிற் பயின்றால் வீடு தானாக நம்மை நாடும். வீட்டை விளக்க மௌனமேபோதும்.

7. "அருத்தமற்ற சடங்குகளும் விக்கிரக ஆராதனையும் பயனற்றது.

8. "குருமார்களையும் தேவகணங்களையும் ஏற்படுத்திக்கொண்டு கும்பிடுவதில் யாதொரு பயனும் இல்லை."

இவைபோன்ற அறமொழிகளைக்கொண்டே புத்தருக்கு நாத்திகப்பட்டம் சூட்டி நம்நாட்டில் புத்தமதமோ—கொள்கையோ இருக்கக்கூடா தென அரும்பாடு பட்டனர். என்றாலும் சாதி சமயம், சடங்குகள் மூலம் அடிமைப்படுத்தி வரும் சூழ்ச்சிகளையறிந்த மக்கள் புத்தமதம் என ஏற்படுத்திக்கொண்டனர்.

நாளாவட்டத்தில் தென்பகுதியிலும் இதே படலத்தைதொடங்கினர். அப்போதுதான திருவள்ளுவர் போன்ற தமிழறிஞர் பழங் கொள்கைகளை விளக்கி நூல்கள் எழுதி அறிவுப்பணியாற்ற முன்வந்தனர்.

திருக்குறளே அவற்றுள் முதனூலாகத் திகழ்ந்தது. இதுவும் ஆரியச் சுவடிக்குப் புறம்பானதன்று, என எடுத்துக்காட்டிவிடலாம் என்ற நோக்கம்கொண்டே பரிமேலழகர் உரை எழுதமுன்வந்தனர்.

ஆரியப் பண்பாட்டை அவிழ்த்துவைத்துக்கொண்டு உரைப்பகுதிகளில் ஆங்காங்கு நுழைத்தும், இசையாதவிடங்களில் மூலபாடங்களையே திருத்தவும், அரும்பாடு பட்டிருக்கிறார். ஆயினும் ஆசிரியர் கருத்தை முழுவதும் மாற்றமுடியவில்லை.

இல்வாழ்க்கை

41. **இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
நல்லாற்றின் நின்ற துணை.

42. **துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
இல்வாழ்வான் என்பான் துணை.

43. **தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்**
கைம்புலத்தா றோம்பல் தலை.

41-ம் குறளில் மூவர்க்கும் என்பதற்கு, பிரமச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி, என்ற மூவர்க்கும், என உரை கூறுகிறார், பரிமேலழகர். தமிழ் நூல்களிலும் கொள்கைகளிலும் இந்த வருணாச்சிரமம் இல்லையே, எனக் கேள்வி எழுமல்லவா? அதற்கு "பிறர் மதம் (ஆரியம்) மேற்கொண்டு இவ்வாறு கூறினார்" என ஆச்சிரம முறையை உள்ளே நுழைக்கின்றார். இவைகளை முறையே ஆராய்ந்து காணலாம்.

1. பிரமச்சாரி — "ஆசாரியனிடத்தினின் றோதுதலும், விரதம் காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தான்" என்கிறார். இவர்கள் எங்கிருந்துவந்தவர்கள்? மணமாகுமுன் கல்வி கற்கும் மாணவர்கள், இல்லறக்குடும்பத்திலும் உண்டல்லவா? இல்லறத்தான் இவர்களைக் காப்பாற்றவேண்டுமென்று கூறுவதில் என்ன பொருளுண்டு?

ஊர் ஊராய்ப் பிச்சை எடுத்தோ, சத்திரம் கண்ட மூலை தண்டச் சோறு தின்றோ, கல்வி கற்றுவரட்டுமென்று பெற்ற பிள்ளைகளை விட்டு விடுவதா? இது தமிழன் வழக்கமும் அல்ல. "சான்றோனாக்குதல் தந்தைக்கு

கடனே" என்பதுதான் கொள்கை. ஆசிரியர் பிறர்மத மேற்கொண்டு ... ருயிருப்பின், "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து—முந்தியிருப்பச் செயல்," என்ற குறட்டு முரணு கவில்லையா! ஆகலின், இது, ஆசிரியர் கருத் தன்று.

2. வானப்பிரத்தன்—"வீட்டைவிட்டுக் காட்டிற்குச் சென்று மனைவியுடன் தவம் செய்யும் ஒழுக்கத்தான். இவர்கட்கு உணவு, உடை, மருந்து, வீடு, முதலிய வசதி செய்து கொடுப்பது இல்லறத்தார் கடமையாகும்" என்கிறார் உரையாசிரியர்.

மனைவியிருக்க, வீடிருக்க, ஏதேனும் தொழில் செய்து பிழைக்காது, காட்டிற்கு ஏன் போக வேண்டும்? போனால் காய்கனி, தழை, சருகு களைத் தின்று காலம் தள்ளாது, இல்லறத்தானுக்கேன் தொல்லை தரவேண்டும். காட்டில் என்ன செய்கிறார்கள்? இதனால் யார்க்கு என்ன பயன்? பிறரை ஏமாற்றிப் பிழைக்கும் வழியா?

"ஆச்சிரமதருமம்" என வடநூலில் உண்டு. இதனை ஏற்றுக்கொண்டு குறள் ஆசிரியர் தமது அறிவு நூலிற் கூறுவரா? அங்ஙனம் கூறியிருப்பின், "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்—போஒய்ப் பெறுவ தெவன்" எனக் கண்டித்திருப்பாரா? ஆகலின் இதுவும் ஆசிரியர் கருத்தன்று.

3. சந்நியாசி—"முற்றும் துறந்த யோக ஒழுக்கத்தான்" என்கிறார். வடநூல் முறைப்படி சந்நியாசம் பெற்றால்தான் மோட்சம் உண்டு. இவர்கள், யோகதண்டம், கமண்டலம், பௌத்திரம், முதலிய சின்னங்களுடன், விளங்கவேண்டுமாம். மனு. அத்—6. சு. 41-ல் கூறப்பட்டுள்ளது. முற்றும் துறந்தது என்ன?

இல்லறத்தாரின் உதவியால், இக்கொள்கையர், நாளடைவில், ஆயிரக்கணக்கான மடாதிபதிகளாய், கோடிக்கணக்கான வருவாயுள்ள அறநிலைய அதிகாரிகளாய், இவர்களின் எடுபிடிகளும் அடிப்பொடிகளுமாய்ச் சாதுக்கள் என்ற பெயரால் 86-இலக்கம் கொண்ட ஒரு கூட்டமாகிவிட்டனர்.

நாட்டிற்கொரு சுமையானதன்றி இவர்களால், நாட்டிற்குக் கிட்டும் பலன் என்ன? இவர்களின் வேதாந்தப் பாடசாலைகளில் பூதம் 5, பொறி 5, புலன் 5 என்ற வரட்டுக் கல்வி படிப்பதால் மக்கட்கு விளையும் நலன் என்ன? இவர்களால் நல்லதின்றேனும், அல்லதில்லாமலாவது உளதா?

ஆசிரியர் இச்சோம்பேறிகட்குதவுமாறு கூறுவரா? அங்ஙனம் கூறுவாராயின் "துப்புரவில்லார் துவரத் துறவாமை—உப்பிற்கும் காடிக்கும் கூற்று" என வெறுத்துரைப்பாரா? ஆகலின் இதுவும் ஆசிரியர் கருத்தன்று.

பிரமச்சாரி—வானப்பிரத்தன்—சந்நியாசி — என்ற மூவர் அல்லர், என்பதை அறியவேண்டும். ஆசிரியர் 41-ம் குறளில் மூவர்க்கும் எனத் தொகுத்துக்கூறி 42-ஆம் குறளில் அந்த மூவரையும் துறந்தார்—துவ்வாதவர்—இறந்தார்—என வகுத்துக்காட்டுகிறார்.

4. துறந்தார்—41-ம் குறளில் சந்நியாசியை நுழைத்து, அவர்களை "முற்றுந்துறந்தார்" எனப் பொருள் கூறிவிட்டமையால்—இதற்குப் பொருள்கூறவியலாது தடுமாறுகிறார். "களைகணனவராற் றுறக்கப்பட்டார்" என்கிறார். வலிந்து பொருள்கொண்டு செயப்பாட்டு வினையை ஏற்றி இடர்ப்படுகிறார்.

இங்ஙனமே வைத்துக்கொண்டாலும் காப்பதற்குரியவரால் துரத்தப்பட்டார் என்பது தானே பொருள். "இயல்புடைய" துறந்தாராகமுடியுமா? அவர்களை, நல்லாரென்று தான் சொல்லமுடியுமா? உழைத்துப் பிழைக்கட்டுமே? ஊரிலிருக்கும் இல்லறத்தார் ஏன் உதவவேண்டும்? துறந்தார் என்பதின் நேர் பொருளுமல்ல, ஆசிரியர் கருத்துமன்று.

துறந்தார் யார்?

பொதுநலத்தின் பொருட்டுத் தந்நலம் துறந்த பெரியார். இவர்களையே ஆசிரியர்—துறந்தார்—நீத்தார்—அறவோர்— அந்தணர் என்ற பெயர்களாற்கூறுவர். "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்—திறந்தாரை யெண்ணிக்கொண்டற்று" என நீத்தார் பெருமையில் ஆசிரியர் பொருள் அறிவிக்கவில்லையா?

5. இறந்தார்—தம்மிடம்வந்து உயிர்நீத்தார் என்கிறார். ஒரு வழிப்போக்கன் பசியோ, பிணியோ, தெருவில் வீழ்ந்துகிடக்கிறான். அவனை நிழலிடம் சேர்த்து உணவு தண்ணீர் பிற உதவிகள் செய்தும் செத்துவிடுகிறான். அவ்வுடலை இடுகாடு சேர்க்கிறார்கள், இது இல்லறத்தான் கடமை. இதில் இறந்தார்க்குத் துணை என்றுளது, இதனையா வள்ளுவர் கூறியிருப்பார்?

மேலும் கூறுகிறார் பரிமேலழகர் இறந்தவன் உயிர் நல்லுலகம் சேர்வதற்காக நீர்க்கடன்

கருமக்கிரியைகள் யாவும், இல்லறத்தார் செய்யவேண்டும் என்று.

தெருவில் சாவோர் நாட்களையெல்லாம் எழுதிவைத்துக்கொண்டு "சிரார்த்தம்" பண்ணிக்கொண்டிருப்பதுதான் இல்லறத்தாரின் பிழைப்புத்தனமா? இளித்தவாயர்கள் என எண்ணிக்கூறுவதா? அல்லது, எவன் எங்கே செத்தாலும் தம்மினத்தார் மூட்டைகட்ட வழி கோலாது திருக்குறட்குரை எழுதுவதிற் பலன் என்ன? என்ற எண்ணமா?

இறந்தார் யார்?

இறந்தார் = கடந்தார், பகை, பிணி, பஞ்சம், முதலிய எக்காரணம் கொண்டோ நாடுவிட்டுக் கடந்தாராய் வந்த அகதிகள்—அல்லது—அநாதைகள் என்றே கொள்ளவேண்டும். இத்தகையோர்களை வரவேற்றுதவுவதும் தமிழ்நாட்டாரின் பண்டைய வழக்கமாதலால் துறந்தார்—எளியர்—அநாதைகள் — என்ற மூவர்க்கும். இல்வாழ்வான் துணை என்பது தான் ஆசிரியர் கருத்து.

6. தென்புலத்தார்—" பிதிரர். பிதிரராவர் படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்ட தோர் கடவுட்சாதி. அவர்கட்கிடம் தென் திசையாதலின் தென்புலத்தார் என்றனர்" என்கிறார்.

இக்கூற்றுப்படி நோக்கின், கடவுளர்களிடமும் சாதிகள் உண்டு. அவற்றிலோர் சாதி தென்புலத்தில் உண்டு, என்றால்—பெற்றோர்களோ, முன்னோர்களோ அங்கிருப்பவர் அல்லர், என்றாகிறது. பிள்ளைகள் செய்யும் நீர்க்கடனைத் தென்புலத்தார் கடன் என்பது எவ்வாறு பொருந்தும்?

பெற்றார்கட்கு மாற்றாள் (பிரதிநிதி)களாக இருப்பர், புரோகிதர் மூலம் கொடுக்கும் பொருள்களை, இவர்கள் பெற்று மகிழ்ந்து, அதனைப் பெற்றோர்கட்கும் அடைவிப்பார்கள், என்பது வடநூற்கொள்கை.

தென்புலத்தாரும் தரகர்கள்தானா? "பற்பலர் நாட்டினும் பார்ப்பாரிலையால்" என்கிறார் கபிலர். அந்நாட்டுப் பெற்றோர்களெல்லாம் பட்டினிகிடக்கின்றார்களா? பெற்றோர் எங்கேயுளர்? என்ன நிலையிலுளர்? ஆவியுருவானால் உணவு வேண்டுமா? வேறு உடம்பு எடுத்துவிட்டால் பெற்றோர் சோறுபோடுவார்களா? இவர்கள் பொருட்டுத் தரும் அரிசி, பருப்பு, காய்கறி, நெய். பால், தயிர் அனைத்தும் இவர்கள் வயிற்றில் போட்டுவிடுகிறார்களா? அங்கு செல்வதெது? பார்ப்பனர் வயிறு நிறைந்தால்தான் பெற்றோர் மகிழ்வார்களா? பெற்றோர் பெயரால் "அற்றாரழி பசிதீர்த்தால்" மகிழார்களா? இத்தியாதி கேள்விகட்கு விடைகள் என்ன?

குழந்தைகட்கு காக்கைமூக்கன் கதை சொல்வதுபோன்ற இதனையா வள்ளுவர் ஏற்றுக்கொண்டு கூறுவர்? அங்ஙனமாயின் "எப்பொருள் எத்தன்மைத்தாயினு மப்பொருள்—மெய்ப்பொருள் காண்பதறிவு" என அறிவுறுத்தல் என்னுவது? ஆகலின் இது ஆசிரியர் கருத்தன்று.

தென்புலத்தார் யார்?

அறிஞர்கள், தமிழ்நாட்டை, தென்புலம், தெக்கணம், தென்னாடு எனக் குறிப்பிட்டு வந்துள்ளனர். இது திசைகுறித்து வந்த பெயரென்றுதான் பலரும் கூறுவர். தமிழ்நாடு நிலமத்தியிலுள்ளதால் பொருந்துமாறில்லை. உண்மையும் அங்ஙனமன்று.

தென்புலம்—என்பதில், தென் என்பது, உயர்ந்த, நிமிர்ந்த, எழுந்த மேலான என்ற பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். தெல்—எழும் இயல்பினது, என்பதாம். மை-விகுதிபெற்றுத் தென்மை, என, ஆகிப், பின், மை விகுதி குன்றித் தென் என நின்றது, பொன் என்பதுபோல்.

நிலம் முழுதும் நீரால் நிறைந்துநின்ற காலம் ஒன்றுண்டு. சூரிய வெப்பத்தால் நீர் குறையக் குறைய நிலமத்தியில் மலை முடிகள் தோன்றின. இதுதான் "கல்தோன்றி மண்தோன்றாக்காலம்" நாளடைவில் மலைத்தொடர்களும், நிலமும், உயிர்களுமே தோன்றலாயின. முதலில் நீரினின்றெழும்பிய நிலமாதல் பற்றி தென் = உயர்ந்த, கு = நிலம் (தெற்கு) கடலினின்றும் உயர்ந்த நிலம், என்ற பொருளில் வழங்கப்பட்டது. தென்னை, தேக்கு, தேக்கம், தேர், திடல், திண்ணை, என்பனவும் உயர்ந்த, என்பது குறிப்பது காண்க; பிற்காலத்தில் திசைகாட்டவும் ஒரு குறிப்பாகக்கொண்டனர்.

புலம் - புலமை, புலவர், நுழைபுலம், வியன் புலம், எனப் பெரும்பாலும் ஆசிரியர் அறிவையே சுட்டுகின்றனர். 43-ம் குறளில் தென்புலத்தார் என்பது, பழந்தமிழ் வழக்குப்படி, உயர்ந்த அறிவுடையார், புலமைசான்ற பெருமக்கள், என்பதாகும்.

இவர்கள் மக்களின் அறிவுவளர்ச்சிக்காகவே பணிபுரிபவர்களாதலால், இவர்கள் உலகில் உள்ளவரை, துணைநின்று காப்பது மக்கள் கடமைகளில் ஒன்றாகும். "அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை — திறனறிந்து தேர்ந்துகொளல்" என்றும் குறிப்பிடுகிறார்.

இப்பெரியார்கள் பருவுடல் நீத்தக் கண்ணும் இவர்களின் நினைவுநாள் கொண்டாடுவதையே இல்லறத்தானின் கடமைகளில் முதன்மையான ஒன்று என்பதை ஆசிரியர் கூறுகிறார். இதுவே தென்புலத்தார் கடன்.

வினாவும் விளக்கமும்

வினா : "ஆதாமின் விலாவெலும்பிலிருந்து ஏவாள் உருவாக்கப்பெற்ருள் என்னும் பைபிள் வார்த்தைகளை, அண்டப்புளுகு என்று இறுமாப்புடன் எழுதும் அண்ணுதுரைக்கு ஒரு வார்த்தை. தெரியாததைப்பற்றித் தெரிந்தவர்போல் பேசுவது தெற்றுத்தனம் ஆகுமே தவிர தெளிந்து தேர்ந்த அறிவுடைமை ஆகாது ?" என்று சி. ம. விசுவாசம் என்னும் கத்தோலிக்கச் சாமியார் ஒருவர் 'திராவிட இயக்கங்களும் கத்தோலிக்கரும்' என்னும் நூலில் எழுதியுள்ளாரே அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம் : 'இறுமாப்பு' அறிஞர் அண்ணுதுரை அவர்களின் கூற்றில் காணப்படுகிறதா? அல்லது கத்தோலிக்கச் 'சாமியாரி'ன் கூற்றில் காணப்படுகிறதா? என்பதை, நடுநிலை நின்று ஆராயும் பண்புபடைத்தோர், வினுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கூற்றைக் கூர்ந்து கவனித்தாலே எளிதில் விளங்கிக் கொள்ளலாம். அறிஞர் அண்ணு அவர்கள், அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்திவராத செய்தியை, அலசிப் பார்த்துவிட்டு, அது அண்டப்புளுகு என்று தம்முடைய கருத்தை வெளியிடுகிருர். அதனை ஏற்றுக்கொள்ளுவதும் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதும் அவரவர் கருத்தைப் பொறுத்ததாகும். அறிஞர் அண்ணு அவர்கள், தம்முடைய கருத்தை ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும் என்று யாரையும் 'இறுமாப்புடன்' வற்புறுத்திக்கூறவில்லை என்பதை யாரும் தெளிவாக அறியலாம். ஆனல் 'சாமியார்' எந்த அளவுக்கு இறுமாபபுடன் காணப்படுகிருர் என்பதை "அண்ணுதுரைக்கு ஒரு வார்த்தை! தெரியாததைப் பற்றித் தெரிந்தவர்போல் பேசுவது தெற்றுத்தனம் ஆகுமே தவிர, தெளிந்து தேர்ந்த அறிவுடைமை ஆகாது (!)" என்ற கூற்றிலிருந்து இனிது அறிந்துகொள்ளலாம். அறிஞர் அண்ணுவின் கருத்தைத் தெளிவுபடுத்தும் முயற்சியில் 'இறுமாப்பு' இருக்கிறதா? அல்லது 'சாமியாரி'ன், கட்டளைக்குரலிலெழுந்த கண்டிப்புரையில் 'இறுமாப்பு' இருக்கிறதா? என்ருல், 'சாமியார்'தான் இறுமாப்பே உருவெடுத்தவராகக் காட்சியளிக்கிருர் என்பதைப், பள்ளியில் பயிலாப் பாமரரும் ஒப்புக்கொள்வர்.

'இறுமாப்பு' என்பது மற்ற துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களைக் காட்டிலும், மதத் துறையில் ஈடுபட்டிருப்பவர்க்குத்தான் மிகவாக இருக்கும் என்பது உலகு அறிந்த உண்மை! அவர்கள் அரசுகளையும் மக்களையும் ஆட்டிப்படைப்பர்! பொதுவாக எல்லா மதங்களையும் சார்ந்த தலைவர்களில் பெரும்பாலானேரிடத்தில் 'இறுமாப்பு' இயல்பாகவே இருக்கும். அவர்கள் பகுத்தறிவுவாதிகளை எதிர்ப்படும்படியான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால், அவ்வளவுதான், 'இறுமாப்பு' பொங்கி எழுந்து தலைக்கேறி நிற்கும்; பின்னர் அவர்கள் பகுத்தறிவுவாதிகளைத் தூற்றுவர், வசைபாடுவர், பழித்துரைப்பர், 'சாப'மிடுவர்! இந்த 'இறுமாப்பு'ப் பண்பு கத்தோலிக்க மதச் சாமியார்களிடத்தில் மிகவாக இருப்பதைப், பழங்காலப் போப்பாண்டவர்களிலிருந்து, இப்பொழுது நம்மை முட்ட வந்திருக்கும் 'சாமியார்' வரையில் பெரும்பாலானேரிடத்தில் காணலாம். இந்தச் 'சாமியார்' தமது நூலில், திராவிட இயக்கங்களின்மீது வசைச் சொற்களையும், இழிச் சொற்களையும் வாரி வாரி இறைத்து, அவற்றின்மீது தம் 'இறுமாப்பு'க் கோட்டையைக் கட்டி மகிழ்கிருர்! மகிழட்டும்!

அண்டப்புளுகு என்று, அறிஞர் அண்ணு அவர்கள் எழுதியுள்ளதாக, இந்தச் 'சாமியார்' தம் நூலில் சுட்டிக்காட்டும் கூற்று, "சிவலிங்கம் சாட்சிசொல்லுவது, எலும்பு பெண்ணுருவாவது, நரி பரியாவது......போன்றவைகள் எங்கும் எக்காலத்திலும் நிகழ்ந்திருக்கமுடியாத கட்டுக்கதைகள்—அண்டப்புளுகுகளேயாகும்" என்பதாகும். அறிஞர் அண்ணு அவர்கள் அறிவியல் அடிப்படையில் வளரும் பகுத்தறிவு ஆராய்ச்சிக்குச் சிறிதும் ஒத்துவராத சில இந்துமத புராணக்கதைகளைச் சுட்டிக்காட்டி, அவை 'கட்டுக்கதைகள்', 'அண்டப்புளுகுகள்',

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 'திருமயிலையில் திருஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணுருவாக மாற்றினார் " என்ற புராணக் கதையைக் குறிப்பிட்டுத்தான், அறிஞர் அண்ணா அவர்கள் 'எலும்பு பெண்ணுருவாவது' என்று எழுதியுள்ளார்கள். ஆனால் பைபிளின் ஆதாம்—ஏவாள் கதையைக் குறிப்பிட்டுத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் அப்படி எழுதியுள்ளார் என்று, 'சாமியார்' எடுத்துக்கொண்டுள்ளார். 'சாமியாரின்' ஆராய்ச்சித் திறன் எவ்வளவு நகைப்புக்கிடமாக இருக்கிறது என்பதை இதிலிருந்து அறிந்துகொள்ளலாம்! அவர் ஆராய்ச்சித் திறனுக்குக் கழிவிரக்கம் உரியதாகட்டும்!

அப்படியானால், ஆதாம் விலாவெலும்பிலிருந்து ஏவாள் உருவாக்கப்பெற்றாள் என்ற பைபிள் கருத்தை ஏற்றுக்கொள்ளலாமா என்றால், அதுவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல, அல்ல என்றுதான் அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் மேற்கண்ட கூற்றில் குறிப்பிட வந்தது, 'பெரியபுராண'க் கருத்தையே ஒழிய பைபிள் கருத்தை அல்ல, என்ற கூற்றின் உண்மை நோக்கத்தைப் புலப்படுத்தவே மேலே விளக்கந் தரப்பட்டது.

'எலும்பு பெண்ணுருவாவது' என்ற கூற்றுக்கு ஆதாமின் விலாவெலும்பிலிருந்து ஏவாள் உருவாக்கப்பெற்றாள் என்னும் பைபிள் கருத்தைப் பொருத்திப் பார்க்க, 'சாமியார்' விரும்புகிறார் என்றால், நாமும் தடையேதும் சொல்லாமல், அந்த அளவில் நின்று அந்தக் கருத்தையும் 'கட்டுக்கதை'—'அண்டப்புளுகு' என்று அப்படியே குறிப்பிட ஆயத்தமாகவே இருக்கிறோம்.

'ஆதாமின் விலாவெலும்பிலிருந்து ஏவாள் உருவாக்கப்பெற்றாள்' என்ற கருத்து பைபிளில் வருவதால், அப்படியே நம்பவேண்டும் என்று 'சாமியார்' எண்ணுகிறார். அறிவியல் வழிப்பட்ட காரண காரிய விளக்கத்தோடு கூடிய நம்புவதற்குரிய ஆதாரங்கள் அந்தக் கூற்றுக்கு இல்லையாதலால், அந்தக் கூற்றை ஏற்றுக்கொள்ள நாம் மறுக்கிறோம். ஆதாமின் விலாவெலும்பிலிருந்துதான் ஏவாள் உருவாக்கப்பட்டாள், அவர்களின் வழித்தோன்றல்கள்தான் மனித இனத்தவர் என்ற பைபிள் கருத்தையும், கதிரவனிலிருந்து தெறித்து விழுந்த அழற்பிழம்பே பிறகு நாளடைவில் உலகமாக மாறிற்று என்றும், அதில் உயிரினங்கள் 'உள்ளது சிறத்தல்' (Evolution) முறையில் வளர்ந்து வந்துகொண்டிருக்கின்றன என்றும் அறிவியல் கூறும் கருத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பைபிள் கருத்தை நம்புவதற்கு இருக்கும் காரணங்களை விட, அறிவியல் கருத்தை நம்புவதற்காக இருக்கும் காரணங்கள்தாம், தெளிந்து தேரும் அறிவுடைமைக்கு ஏற்றனவாக அமைந்திருக்கின்றன. பைபிள் கருத்தை நாம் மட்டும் புறக்கணிக்கிறோம் என்று கருதவேண்டாம். பொதுவாக உலகிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களும் சரி, குறிப்பாகக் கத்தோலிக்கப் பல்கலைக்கழகங்களும்—கல்லூரிகளும் சரி அந்தக் கருத்தைப் புறக்கணித்துவிட்டு, 'உள்ளது சிறத்தல்' என்ற அறிவியல் கருத்தைத்தான் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. எந்தக் கத்தோலிக்கக் கல்லூரி 'உள்ளது சிறத்தல்' என்ற அறிவியல் கருத்தை அடியோடு ஒதுக்கிவிட்டு, ஆதாம்—ஏவாள் கதையை அப்படியே அழுத்தந் திருத்தமாக ஏற்றுக்கொண்டிருக்கிறது? உலகத்தோற்றத்துக்கும், மக்கள் தோற்றத்துக்கும் ஆன காரணங்களை அறியும் பாடத்திட்டத்தில் எந்தக் கத்தோலிக்கக் கல்லூரி அறிவியல் கருத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, அண்டத்தை ஆறுநாட்களில் ஆண்டவன் படைத்த கதையையும், ஆதாம்—ஏவாள் கதையையும் அப்படியே முழுக்க முழுக்கச் சேர்த்திருக்கிறது? ஆதாம்—ஏவாள் கதையை நம்புவதற்குப் பொருத்தமான, தெளிந்து தேரும் ஆதாரக் காரணங்கள் என்ன இருக்கின்றன? அந்தக் கதையைக் கட்டுக்கதை, அண்டப்புளுகு என்று சொல்லுவதில் என்ன தவறு? அது கட்டுக்கதை அல்ல, அண்டப்புளுகு அல்ல என்றால், இங்குள்ள கத்தோலிக்கக் கல்லூரிகளில் மட்டுமாவது அந்தக் கருத்தை மட்டும் நிலைநாட்டி, 'உள்ளது சிறத்தல்' என்ற கருத்தைக் கல்லூரிகளில் நுழையவிடாமல் இந்தச் 'சாமியார்' செய்திருக்கலாமல்லவா? பைபிளுக்கு மாறுபட்ட கருத்துக்குக் கத்தோலிக்கக் கல்லூரியில் எப்படி இடமளிக்கப்படுகிறது? இந்தச் 'சாமியார்' ஏன் அங்கெல்லாம் போய் முட்டி மோதிக்கொள்ளவில்லை? நம்மை முட்ட வருவானேன்?

'உலகம் உருண்டை அல்ல; கதிரவனை உலகம் சுற்றவில்லை; உலகத்தைத்தான் கதிரவன் சுற்றுகிறான்' என்று இந்தச் 'சாமியாரி'ன் முன்னோடிகளாகத் தோன்றியிருந்த 'சாமியார்கள்' பைபிள் கருத்தை ஆதாரமாகக்கொண்டு கூறுவதாகக் கூறினார்களே, அது கட்டுக்கதையா? 'உலகம் உருண்டை; கதிரவனை உலகம் சுற்றுகிறது; பல கிரகங்கள் தன்னைச் சுற்றிவரும்படியான ஒரு அண்டத்தில் கதிரவன் நிலைபெற்றிருக்கிறான்' என்று அறிவியல்

801

அறிஞர்கள் கண்டறிந்து கூறினார்களே அது கட்டுக்கதையா? பைபிள் கருத்து கட்டுக்கதை என்று கிருத்துவக் கல்லூரிகளே முழங்குகின்றனவே! இந்தச் 'சாமியார்' உலகம் உருண்டை என்பதை ஒப்புக்கொள்ளுகிறாரா அல்லது பழங்காலச் 'சாமியார்கள்' போல் தட்டை என்கிறாரா? உலகம் தட்டை என்று நம்பியது எப்படிக் கட்டுக்கதையாகி நிற்கிறதோ, அப்படித்தான் ஆதாம்—ஏவாள் கதையும் கட்டுக்கதையாகி நிற்கிறது!

'உள்ளது சிறத்தல்' என்ற அறிவியல் கருத்துதான் அறிவியல் அறிஞர்கள் அத்துணைப்பேராலும் தெளிந்து தேர்ந்த அறிவுடைமையாகக் கருதப்படுகிறதே யல்லாமல், ஆதாம்—ஏவாள் கதை அல்ல! "மக்கள் தோற்றத்தைப் பற்றிய அறிவியல் கருத்துக்கள் அனைத்தும் பொய், ஆதாம்—ஏவாள் கதைதான் மெய்" என்று வாதிட்டு எந்தக் கத்தோலிக்கக் கல்லூரியிலாவது எந்தக் கத்தோலிக்கச் 'சாமியாராவது' இதுநாளில் நிலை நாட்டியதுண்டா? ஆதாம்—ஏவாள் கதை, காரண காரிய விளக்கங் கேட்காமல் நம்புவதற்கான கதையாக வைக்கப்பட்டிருக்கிறதே யல்லாமல், தெளிந்து தேரும் அறிவுடைமையின்பாற்பட்ட கருத்தாக எந்தக்கல்லூரியிலும் எந்த ஆராய்ச்சிக் கூடத்திலும், எந்த விவாத அரங்கிலும் வைக்கப்படவில்லையே!

'ஆதாமின் விலாவெலும்பிலிருந்துதான் ஏவாள் உருவாக்கப்பெற்றாள், அவர்களால் தான் மனித இனம் பெருக்கப்பட்டது' என்பதை நம்புவதற்கு இந்தச் 'சாமியாரு'க்கு என்ன ஆதாரங்கள் உண்டோ, அந்த ஆதாரங்கள் அனைத்தையுந்தான் நாம் அலசிப் பார்க்கிறோம்; அறிவியற் கருத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறோம்! தெளிந்து தேருகிறோம்; ஆதாம்—ஏவாள் கதை கட்டுக்கதை என்ற முடிவுக்கு வருகிறோம். எனவேதான், இந்தச் 'சாமியாரு'க்கு அவருடைய சொற்களையே திரும்பக் காணிக்கையாக வைக்க முற்படுகிறோம்: இல்லாததை—இருக்கமுடியாததைப்பற்றி, இருந்ததுபோல் பேசுவது "தெற்றுத்தனம் ஆருமே தவிர, தெளிந்து தேர்ந்த அறிவுடைமை ஆகாது!"

❖ ❖ ❖

வினா: திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை ஒன்று அமைக்கவேண்டுமானால் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள் என்ன?

விளக்கம்: சிறிய பஞ்சாயத்து அவை (Minor Panchayat Board) அமைந்தும், அமையாமலும் இருக்கும் ஊர்களைச் சிற்றூர்கள் என்றும், பெரிய பஞ்சாயத்து அவை (Major Panchayat Board) அமைந்த ஊர்களைப் பேரூர்கள் என்றும், நகர அவை (Municipality) அமைந்த ஊர்களை நகர்கள் என்றும் கொள்ளுகிறோம்.

சிற்றூர்—பேரூர்—நகரம் ஆகிய ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கிளைக்கழகந்தான் அமையலாம். அவை முறையே சிற்றூர்க்கிளை—பேரூர்க்கிளை—நகரக்கிளை என்று பெயர் பெறும்.

கிளைக்கழகம் ஒன்று அமைக்கவேண்டுமானால், குறைந்த அளவு இருபத்தைந்து உறுப்பினர்களாவது இருக்கவேண்டும். இருபத்தைந்து உறுப்பினர்களுக்குமேல் சேர்க்க முடியும் என்ற உறுதிப்பாடுடைய ஊர்களில், கழகப் பற்றுடைய முக்கியமான ஒருவர் பக்கத்துக் கிளைக்கழகச் செயலாளர் அல்லது பக்கத்திலுள்ள மாவட்டப்பிரதிநிதி அல்லது பக்கத்திலுள்ள பொதுக்குழு உறுப்பினர் ஆகியவரில் யாரேனும் ஒருவரது சிபாரிசின்பேரில், அந்தந்த மாவட்டச் செயலாளர்களிடமிருந்து உறுப்பினர் சேர்க்கும் பதிவுத்தாள்களை விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளவேண்டும். உறுப்பினர் கட்டணம் எட்டு அணாவில் நான்கு அணாவை அந்தந்த கிளைக்கழகத்தில் சேர்ப்பதற்காக வைத்துக்கொண்டு மீதி நான்கு அணாவைக் கிளைக்கழகத்தின் செலவில் தலைமைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

உறுப்பினர்க்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுகளும் தலைமை நிலையத்திலிருந்து அனுப்பிவைக்கப்பெறும்.

பிறகு கிளைக்கழகத் தேர்தல் நடத்தித்தரும்படி மாவட்டத் தி. மு. கழகச் செயலாளருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும்.

மாவட்டக் கழகச் செயலாளர் ஒரு நாளைக் குறிப்பிட்டு, ஒரு தேர்தல் அதிகாரியை நியமித்தோ அல்லது தாமே நேரில் சென்றோ கிளைக்கழகத் தேர்தலை நடத்திவைப்பார். கிளைக்கழகப் பதிவுத்தாள்கள் இரண்டு மாவட்டக் கழகத்தால் அனுப்பிவைக்கப்படும். தேர்தல் நடந்த பிறகு தேர்தல் முடிவுகளை அந்தப் பதிவுத்தாள்களில் எழுதி ஒன்றை மாவட்டக் கழகத்துக்கும், மற்றொன்றை மாவட்டக் கழகத்தின் மூலம் தலைமைக் கழகத்திற்கும் அனுப்பிவைக்கவேண்டும். தலைமைக் கழகத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட விபரம் மாவட்டக்கழகத்திற்கும் கிளைக்கழகத்திற்கும் அனுப்பிவைக்கப்பெறும்,

மலர்க்காடு

“ கன்னற் பொருள்தரும் தமிழே
நீயோர் பூக்காடு நானோர் தும்பி ”

தையற்கலை ஆண்கள் உடைகள் (முதற்பகுதி)

[ஆசிரியர் : கே. பி. சுந்தரம் ஜி. சி. டி. பக் : 192. விலை : ரூ. 3—0—0. கிடைக்குமிடம் : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

பெண்கள் உடைகள் பற்றிய தையற்கலை ஏட்டைச் சிறப்பாக எழுதித் தமிழுலகிற்கு அளித்த தையற்கலை நிபுணர் தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள், இப்பொழுது ஆண்கள் உடைபற்றிய தையற்கலை ஏட்டின் முதற்பகுதியைக்கொணர்ந்துள்ளார். இந்த முயற்சி தமிழகத்தில் புதிய முயற்சி—போற்றுதற்குரிய முயற்சி—இன்றியமையாத முயற்சி. முயற்சியில் தோழர் சுந்தரம் அவர்கள் பெரு வெற்றி கண்டுள்ளார் என்றே சொல்லவேண்டும். தையற்கலை தெரிந்தோரின் சிறு துவக்க உதவியின் பேரில், பிறகு தாமாகவே துணிகளை வெட்டவும், உடைகளைத் தைக்கவும் பழகிக்கொள்வதற்கு இந்த நூல் உறுதுணை பயப்பதாகும். விதவிதமான, கவர்ச்சி தரும், புதிய உடைகளைத் தைத்துப் பழக, தொழில் நடத்தும் தையற்காரர்க்கே இந்நூல் சிறந்த வழிகாட்டியாக விளங்குவதாகும். தெளிவான விளக்கப் படங்களுடன் தையற் கலையைப் பயிற்றுவிக்கும் ஆசிரியரின் பாங்கு போற்றுதற்குரிய தாகும். பாரி நிலையத்தார் நல்ல தாளில், அழகான முறையில் அச்சியற்றிக் கவர்ச்சிகரமான அமைப்போடு நூலை வெளியிட்டுள்ளார்கள். இது தையற்கலை பழகுவோர்க்கும், தையற்காரர்க்கும் பெரிதும் பயன்படும் நூலாகும்.

❋

சமணர் மலை செல்வோம்

[ஆசிரியர் : ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால். பக் : 68. விலை : அணா 8. கிடைக்குமிடம் : 132, தங்கசாலை வீதி, சென்னை-1.

மதுரைக்கு மேற்கே பெரியகுளம் போகும் பெருஞ்சாலையில், ஐந்து மைல் தொலைவில் உள்ள புதுக்கோட்டை என்னும் சிற்றூருக்கு அருகில் சமணர் மலை என்னும் பெயரில் மலை ஒன்று இருக்கிறது. அதில் சமண சமய சிற்பங்களும், பிராமி எழுத்தாலாய கல்வெட்டுச் செய்திகளும் காணப்படுகின்றன. அந்த மலையின் வரலாற்றுச் சிறப்பைப் பற்றியும், அங்கு வாழ்ந்த அறவோர் பற்றியும், ஆசிரியர் தோழர் சீபால், இந்நூலில், ஆராய்ச்சிக் கருத்துக்களோடு விளக்கிக் காட்டியுள்ளார். தமிழகத்தில் சமண சமயம் வாழ்ந்த வரலாற்றை அறிவதற்கு இந்நூல் சிறிது பயன்படுவதாகும்.

❋

திருந்தியவள்

[ஆசிரியர் : திரு. முக. கௌசிகன். பக் : 76. விலை : அணா 12. கிடைக்குமிடம் : 14, முதற்சாலை, சக்ரியா காலனி, கோடம்பாக்கம், சென்னை-24]

இது ஒரு சமூக சீர்திருத்த நாடகம். சமூகத்தில் காணப்படும் பல பழக்க வழக்கங்களையும், நிகழ்ச்சிகளையும் இந்நாடகத்தின் மூலம் படம் பிடித்துக் காட்டி, குறைகளைக் களையவும், நிறைகளைப் பெய்யவும் ஆன உணர்ச்சியையும், ஊக்கத்தையும் எல்லோர்க்கும் அளிக்கும்படியான முறையில் ஆசிரியர் இந்நாடகத்தை எழுதியுள்ளார். இது ஆசிரியரின் முதல் முயற்சி.

❋

தமிழில் தந்தி

[ஆசிரியர் : அ. சிவலிங்கம். பக் : 20. கிடைக்குமிடம் : 26/276 C. செல்வபுரம், கோயமுத்தூர்.]

தமிழகத்தின் ஆட்சி தமிழ் மொழியிலேயே நடைபெற வேண்டும் என்ற எண்ணம் எங்கணும் எழுச்சி பெற்றுவரும் இந்நாளில், இப்படிப்பட்ட ஒரு நூல் வெளிவருவது போற்றி வரவேற்கத் தக்கதாகும். இப்பொழுது தந்தியில் செய்திகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலும், சிறிதளவு இந்தியப் பேரரசினர் முயற்சியில் இந்தியிலும் அனுப்பப்படுகின்றன. தமிழ் நாட்டில் தமிழில் செய்திகள் அனுப்பும் முறை ஏற்பட்டாகவேண்டும். அந்த முறை இதுகாறும் ஏற்படவில்லை. அந்தக் குறைபாட்டைப் போக்கும் வகையில் தோழர் சிவலிங்கம் அவர்கள் தமிழில் தந்திச் செய்திகள் அனுப்பும் முறையைக் கண்டுபிடித்துள்ளார். இந்தியப் பேரரசினரும், சென்னை மாநில அரசினரும் இந்த முயற்சிக்கு நல்ல ஆதரவு கொடுத்து அதனைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான வழி வகைகளைக் காணவேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறோம்.

பொங்கலன்று வருகிறது!

கலை உலகிற்குப் புதியதோர் காணிக்கை!

திக்கெட்டிலுமிருந்து தேன் சுவைச் செய்திகள்!

திரையுலகத் தாரகைகளின் பவனி!

வெள்ளிவீதி

சினிமா-மாதம் மும்முறை இதழ்

விலை 2 அணா

விபரங்களுக்கு: வெள்ளிவீதி
92. தியாகராயர் ரோடு
சென்னை. 17.

Regd. No. M 6296 MANRAM

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்"

மலர் - 3 1954 - 55

24 இதழ்கள் கொண்ட பைண்ட் செய்யப்பட்ட மலர் ஒன்று

விலை ரூ. 8-0-0

(தபாற்செலவு உட்பட)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.
வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 10 வீதம் அனுப்பவேண்டும்.)

விபரங்கட்கு :

"மன்றம்"
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.